ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹூ ஆடி-மீ 9-உ (24—7—1932). | மலர் 13.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

தோழர். ம. சிங்காரவேலு பி.ஏ., பி.எல்.,

அவர்கள் எழுதிய

## "கடவுளும் பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதிக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இதுகாலை, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். "கடவுள்" என்னும் வார்த்தை வெறும் சொல் மயக்கே யொழிய வேறில்லை என்பதையும், புராணக்காரர்கள் கடவுளைக் கற்பித்திருக்கும் பொய்புரைகளையும், தத்துவ நூலாசிரியர்கள் கடவுளைப்பற்றிக் கூறும் கற்பனைகளையும் விஞ்ஞான முகத்தால் ஆராய்ந்து, அவைகள் யாவும் கற்பனைகள் என்பதைத் தெள்ளிதில் விளக்கப்பட்டுளது. "கோழி முதலில் உண்டானதா முட்டை முதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பிள்ளி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அனுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள். ஒருவாரத்தில் கிடைக்கும்.

சுமார் 100 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்!

மானேஜர்,

குடி அரசு புக்டிபோ, ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... 0—6—0
5. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
6. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
7. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0
8. மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.

---

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.
ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
, வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.

### சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலுபி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

---

### ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)
பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை




---

## Read.

### The 'Citizen'

and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

---

### சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

---

### தாது புஷ்டிக்கு

## "கெய்ரோடைன்".

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ண்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக அனுப்புகிறோம். விலாசம்:
ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

---

### தேவை.

தஞ்சை, நாகை, திருவாரூர் தவிர மற்ற ஒவ்வோர் இடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை. மாதச்சம்பளம் ரூ 25. கொஞ்சம் படிப்பிருந்தால் போதுமானது. விபரத்திற்குஉடனே 0—1—3 ஸ்டாம்புடன் எழுதவும், சமயத்தை கைவிடாதீர்.

டி. எஸ். நாராயணசாமி.
வடக்குதெருவு.
திருவள்ளூர்.

---

### குஷ்டம்

வெண்குஷ்டம் - பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

---

### ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Restore youthful retaintive & erective capacity & insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 60 Pills Rs 8 only. Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To:

*SAILASRAM (K)*
*Chandanpur (Khulna)*
*E. B. R.*

# மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

## (Scientific Method and Ignorant Beliefs.)

### மதங்களால் ஏதேனும் பயனுண்டா?

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

—:0:—

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(3)

மெஞ்ஞான முறைப்படி, மந்திரங்களை விசாரிக்குமளவில், மதங்களும் பெருத்த மூட நம்பிக்கையாகவே ஏற்படுகின்றது. முன்னிரண்டு கட்டுரைகளில் மெஞ்ஞானத்தின் Science லட்சணங்கள் இரண்டெனக் குறிப்பிட்டோம். அவையாவன, பார்த்தல், பரீட்சித்தல், எனக் கண்டோம். அம்முறையின் லட்சணங்களின் படி விசாரிக்குமளவில், அநேக நம்பிக்கைகளாகிய மந்திரம், தந்திரம், பேய், பிசாசு, அம்மன், பிடாரி, காட்டேரி, பில்லி, சூன்யம், மாரியாத்தாள், மகாமாரி இவை மூடநம்பிக்கைகளாகக் கருதப்படுமென்பதும் கண்டறிந்தோம். இவ்வித மூடநம்பிக்கைகளில், இரண்டொன்றை திருஷ்டாந்தமாக எடுத்து, மெஞ்ஞான முறைப்படி எவ்விதம் இவை வழங்க வேண்டுமென்பதையும் குறிப்பிட்டோம். இனி மொத்தத்தில் மூட நம்பிக்கைகளில் ஏதாகிலும் உண்மையுண்டாவென விசாரிப்பாம். இரண்டொரு கேள்விகளை இது சம்பந்தமாகக் கேட்கப்புகுவாம். மூட மதங்களால் மனிதருக்கு என்ன வசதிகள் உண்டாயின? உணவுப்பொருள்கள் அதிகரித்தனவா? போக்கு வரத்திற்கு வசதிகள் அதிகப்பட்டனவா? விஷய ஞானம் விளக்கமடைந்தனவா? வைத்தியம் அபிவிருத்தி அடைந்தனவா? சுகாதாரம் விஸ்தரித்ததா? மனிதனுக்கு வேண்டிய பல்லாயிரம் வசதிகளுக்கு எதற்காகிலும், மதங்களாகிலும் மூடநம்பிக்கைகளாகிலும் அனுகூலமாகவாவது, அல்லது விஷயங்களை கண்டறிய வேண்டியதற்காவது கருவியாக இருந்தனவா? உலக ஞானத்தை அடைய, "பார்த்தல்" "பரீட்சித்தல்" எனும் கருவிகள் மூலமாகத்தான் அடைய முடியும், வெறும் நம்பிக்கையால் எதுவும் அறிய முடியா. மூடநம்பிக்கையால் எந்த பிரயோசனத்தையும் அடைய அதனினும் கஷ்டம், ஏனெனில் மூடநம்பிக்கைகள் பார்க்கவும் முடியா. பரீட்சிக்கவும் முடியா. சூன்யத்தால் கெடுதி சம்பவித்ததென்று சொல்வதை எப்படி பார்க்க முடியும்? அல்லது எப்படி பரீட்சிக்க முடியும்? நல்ல நாளில், ஆரம்பித்த காரியங்கள், எத்தனை கைகூடின என்று அறிவதெப்படி? ராகு காலத்தில் செய்த பிரயத்தனங்கள், எத்தனை தோல்வியுற்றனவென்று எப்படி கணக்கிட முடியும்? இவையாவும் வெறும் நம்பிக்கையேயொழிய, வேறில்லை. பஞ்சாங்கத்தில் ராகுகாலம், குளிகைகாலம், பல்லி விழும் பலன் என்று எழுதி வைத்திருக்கப் பார்க்கின்றோமேயொழிய, அதன்படி நடப்பவர்களுக்கு நன்மையோ, தீமையோ, இடைவிடாது நடந்தேறி வருகின்றதென்று சொல்வதற்கிடமில்லை. அமாவாசையில் மருந்துண்டால் பலன் கொடாதென்பது, புரோகித நம்பிக்கையேயொழிய, ஆஸ்பத்திரி சம்பவமல்ல. இந்த நம்பிக்கையை பரீட்சிக்க வேண்டிய இடம், ஆஸ்பத்திரியொன்றே. அந்த இடத்தில், ஆயிரக்கணக்கானவர்களுக்கு, எந்த வேளையிலும், மருந்து கொடுத்து வருகின்றார்கள். ஆங்கு இந்த நம்பிக்கைக்கு எந்த வித ஆதாரமும் கிடைக்கவில்லை. உலக முழுமையும் கோடான கோடி பேர், அமாவாசைகளிலும், கிருத்திகை, பரணி, ராகு காலம், குளிகை காலம் முதலிய சுப அசுப காலங்களில், மருந்துண்ணுகிறார்கள். நோயின் லட்சணப்படியும், மருந்தின் குணத்தின் படியும், பலன் கிடைக்கின்றதேயொழிய, நாள் நட்சத்திரப்படி எந்த பலனையும் நிர்ணயிக்க முடியவில்லை. அமாவாசைகளிலும், கிருத்திகை, பரணி, நட்சத்திரங்களிலும், நோய் அதிகரிக்கின்றதென்பதும் வெறும் நம்பிக்கையேயொழிய நிச்சயமாக சொல்ல முடியாது. இதையும் ஆஸ்பத்திரி மூலமாகத்தான் கண்டறியலாம். ஆஸ்பத்திரிகளில், ஆயிரக் கணக்கானவர்களின் நோயின் கடுமையை, பிரத்தியேகமாக குறிப்பிடுவதைப் பார்க்கலாம். அவைகள் மூலமாக, நோயாளிகள் அமவாசை, பரணி, கிருத்திகைகளில், பாதையோ, நோயோ அதிகரிப்பதாகத் தெரியவில்லை. இதுவும் ஓர் குருட்டு நம்பிக்கையே! இத்தியாதி நம்பிக்கை வழங்குவதைக் காண்கின்றோம். ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஆஸ்டிரேலியா தேசங்களில் வாழும் கோடான கோடி மக்களிடம் இந்த வித மூடநம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை. எந்த ஆங்கிலேய, பிரஞ்சு ஜர்மன், ரஷ்யன் டாக்டரும் இந்திய நம்பிக்கைக்கு ஏதாகிலும் ஆதாரம் இருப்பதாகச் சொல்வதில்லை. மூட நம்பிக்கையுடன் நின்றாலும் அவசியமில்லை. அமாவாசை, பரணி கிர்த்திகையில் மருந்துண்ணு மூட விரதங்களால்; உயிர்களுக்கே கெடுதி வருவதாலேயே, இந்த நம்பிக்கையை கொலை பாதகமாக எண்ண வேண்டி வருகிறது. சமயத்தில் தக்க அவுஷதங்களால் நோயைப் போக்க முயற்சியாது காலதாமதத்தால் உயிர் போக வைக்கும் காரியத்தை தண்டிக்கத்தக்கதே. "நான் செய்வது நல்லார் செய்யார்" என்ற பொய் மொழியையும், இதற்கு ஆதாரமாகக் கட்டி வைத்துக் கொண்டார்கள். இதுகள் எல்லாம் ஜோதிடனுடைய ஜீவன உபாயமென அறிக. மத குருக்களும், மத வாதிகளும் பிழைக்கவே, கடவுளையும், அம்மன் பிடாரிகளையும் சிருஷ்டித்துக் கொண்டார்கள். ஜோதிடர் பிழைக்க, நட்சத்திர வசியத்தையும், மரண யோகத்தையும் கற்பித்துக் கொண்டார்கள்.

உலகில் ஒருவன் ஜீவனம் செய்ய என்ன உபாயங்கள் தோன்றுகின்றன பாருங்கள்! இந்த ஜோதிடப் புரட்டைச் சற்று விசாரிப்பாம்.

ஜோதிடத்தின் முக்கிய கருத்து என்னவெனில், சிற்சில நட்சத்திரங்களால், மனிதனுடைய நடக்கை (Behaviour) வசியப் படுவதாக (Affected) எண்ணப் படுகிறது. இதை வெறும் நம்பிக்கையே தவிர, பரீட்சித்துப் பார்த்த தீர்மானமல்ல. வானத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரத்திற்கும், இவ்வுலகில் வாழும் ஜீவனுக்கும் என்ன சம்பந்தமெனப் பார்ப்போம். ஒரு மாதத்தை 27 நட்சத்திரங்களாக பிரித்துள்ளார். ஒவ்வொரு நாளும், அந்தந்த நட்சத்திர நாளெனக் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த நாளில் பிறந்த மனிதன், அந்தந்த நட்சத்திரத்தில் பிறந்தான் என்பது ஓர் நம்பிக்கை. இந்த நம்பிக்கையின்படி, எந்தெந்த நட்சத்திரத்தில் பிறந்தானோ, அந்தந்த நட்சத்திரத்திற் கேற்ற, நடவடிக்கையுடையவனாவான் என்பது ஜோதிட சித்தாந்தம். அந்தந்த நட்சத்திரத்தின் செல்வாக்குக் குட்பட்டவன், இந்த விதமாக நடப்பான், இன்ன ஆபத்துகளுக்கு உட்படுவான், அல்லது இன்ன சம்பத்து செல்வங்களை அடைவான் என்பதும், ஜோதிடக் குறி எனப்படும். அதாவது இனி வருங்காரியங்களைக் குறிக்கப்படுமாம்! இது தான் ஜோதிடமென்பதும் (Astrology) என்பதும், ஜாதகமென்பதும், இது மெஞ்ஞான முறையால் பெறப்பட்ட அனுபவக் காட்சியா எனப் பார்ப்போம்.

எந்த நட்சத்திரமாயினுஞ் சரி, அந்த நட்சத்திரத்திற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? 27 நட்சத்திரங்களில் அடங்கிய நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும், பூமியை விட அநேக மடங்கு பெரிதாய் உள்ளன. முதலில் பூமியில் வாழும் நமக்கும், நமது பூமிக்கும் என்ன சம்பந்தமெனப் பார்ப்போம். பூமியோ, நம்மை விட கோடி கோடி, கோடான கோடி பெரிது. பூமிக்கும் நமக்குமுள்ள சம்பந்தம், கடலோரத்திற்கும், அதிலுள்ள ஒரு சிறு மணலுக்கும் உள்ள அளவுக்கு மேற்பட்டது. அவ்வளவு சிறிய மணல்; அவ்வளவு பெரிய கடலோரத்தில் எப்படி பாதிக்கப்படும்? அது போலவே அற்பமணலாகிய நாம், அவ்வளவு பெரிய பூமியால் எப்படி பாதிக்கப்படுவோம்? இது நிற்க, நமது அருகாமையிலிருக்கும் மலைகளால் நமது நடவடிக்கை பாதிக்கப்படுகின்றதா? அல்லது குன்றுகளால் பாதிக்கப் படுகின்றோமா? அல்லது கடல் வனாந்திரங்களால் பாதிக்கப்படுகின்றோமா? ஆறு, குளம், பள்ளம், மேடு, இவைகளால் பாதிக்கப்படுகின்றோமா? ஆல விருட்சம், அரச விருட்சங்களால் பக்தப்படுகின்றோமா? இவைகளின் நிழலில் நிற்கும் நமக்கும், அவைகளுக்கும், நமது நடவடிக்கைகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை எனில் கல்லும், மண்ணும், சாம்பலும் நிறைந்துள்ள புதன், அங்காரகன், சுக்கிரன் முதலிய "நட்சத்திரங்களால்" நமது நடவடிக்கை எவ்விதம் பாதிக்கப்படும்? சூர்யனை எடுத்துக்கொள்ளுவோம். சூர்யன் நமது பூமியைப் போன்ற கோடி பூமிகளை விழுங்கிவிடும். நமது பூமிக்கும், சூர்யனுக்கும் சுமார் 9 கோடி மைல் தூரம் இருக்கின்றது. அவ்வளவு தூரத்திலிருந்து சூரியன் அவ்வளவு பெரிதாய் இருந்து பிரகாசிக்கின்றமையால் அவ்வளவு சிறியதாகத் தோன்றுகின்றது. அவ்வளவு தூரத்திலிருந்து நமது நடவடிக்கைகளை எப்படி வசப்படுத்த முடியும்? சூரிய வெளிச்சத்தால் புல்பூண்டுகளெல்லாம் முளைக்கின்றன. நமக்கு வெளிச்சமும் கொடுக்கின்றது. அதன் அனல் கோடைகாலத்தில் உஷ்ண அலைகளாகி (Heat waves) நம்மை அவஸ்தைப்படவைக்கின்றது. இதைத்தவிர நமது செய்கைகளை வசப்படுத்துவதென்றால் அது எவ்விதம்? மகத்தாகிய சூரியன் நமது பூமியை இழுக்கும் சக்தியால் நமது பூமி அதனை (சூரியனை) சுற்றி வருகிறது, இதைத்தவிர மற்ற எந்தவித வசமும்

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

## இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது
# சுயமரியாதை மகாநாடு.

வரவேற்புக்கழகத்தலைவர் தோழர்

## எஸ். லக்ஷிமிரதன்பாரதி எம். ஏ. பி. எல். அவர்கள் சொற்பொழிவு.

சென்ற 17-7-32ந் தேதி காரைக்குடியில் நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவர் தோழர் எஸ். லக்ஷிமிரதன்பாரதி எம். ஏ. பி. எல். அவர்கள் செய்த வரவேற்புப் பிரசங்கம் வருமாறு:—

சகோதரிகளே! சகோதரர்களே!!

என்னிலும் ஆற்றலிலும், திறமையிலும் செல்வாக்கிலும் அறிவிலும் தீவிர உணர்ச்சியிலும் வலியார் பலர் மலிந்து கிடக்கும் இந்த ஜில்லாவிலே என்னை வரவேற்புக்கழகத் தலைவராகத்தெரிந்தெடுத்து எனது தோழர்கள் தந்த இப்பணியை நான் ஏற்றுக்கொள்ள வேண்டியது எனது கடமையாயிற்று அவர்களது சார்பாக நான் உங்களெல்லோரையும் வரவேற்கிறேன்.

இந்த ஜில்லாவிற்கு இது இரண்டாவது மகாநாடு. இம்மகாநாட்டிற்கு தலைமை வகிக்குமாறு புதுவை பிரஞ்சு இந்திய அரசாங்க மந்திரி தோழர் எ. வி. முத்தையா அவர்கள் இசைந்தது நம்மெல்லோர்க்கும் பெருமகிழ்ச்சியைத்தந்ததுடன், இம்மகாநாட்டின் வெற்றிக்கும் ஒரு அறிகுறியாயிற்று. வயதானும், கல்வி அறிவானும், உலக அனுபவத்தானும் முதிர்ந்த இத்தகைய பெரியாரொருவர் நமதியக்கக் கொள்கைகளனைத்தையும் அங்கீகரித்து ஆதரிப்பதுடன் அவற்றை நிலைபெறச்செய்வதிலும் இத்தனை ஆர்வத்துடன் கலந்து கொள்ளுதல் இவ்வியக்க விரோதிகளின் வம்புப் பேச்சுகளுக்கு ஒரு வாய்ப்பூட்டாக விருக்குமென்பது திண்ணம். உண்மை கண்டவிடத்து பல அசௌகரியங்களையும், துன்பங்களையும் கருதாது நமது விருப்பத்திற்கிணங்கி இம்மகாநாட்டை நடத்திக் கொடுக்கும் தோழர் முத்தையா அவர்களுக்கு நாமென்றும் நன்றி பாராட்டுவோம்.

முதலாவது மகாநாடு பலமான எதிர்ப்புகளுக்கிடையே வெகுவிமரிசையாக இதே நகரில் நடந்தேறியதை நீங்கள் யாவரும் நன்கறிவீர்கள் வைதீகப்பேய் பிடித்தும்; பழமையிற் பைத்தியம், பழக்க வழக்கக் கட்டுப்பாடுகள், பிராமணர்களுக்கென அன்னசத்திரங்களும், எட்டிலடங்காத தெய்வங்களுக்கு ஆலயங்களும் அமைத்தல், பணவாசை முதலிய நோய்களால் பீடிக்கப்பட்டும், மக்கள் பெருமை குறைந்து, சிறுமை பெருகி பரதவிக்க இந்த ஜில்லா மெய்யறமாகிய புத்திரப்பேறின்றி மலடியாக வாடி நின்ற காலையில் முதலாவது மகாநாடு துயரம் தீர்க்கவந்த ஒரு குழந்தையாகத் தோன்றவே தோழர்கள் யாவரும் அளவிலா ஊக்கத்துடன் அதற்குப்புதுமை நடத்தி பெருமகிழ்ச்சியெய்தினர். எனினும் தோழர்கள் தம் உழைப்பின் மிகுதியால் களைத்ததினாலோ அன்றி மற்றையோர் தாமடைந்த பேருவகையின் பெருமித மயக்கத்தினாலோ பெற்ற குழந்தையைப் போற்றிப் போஷிக்க மறந்தனர். அதனால் இந்த ஜில்லா மக்களிற் பெரும்பாலோர் முன்போலவே கவியின் கூற்றுக்கிணங்க ‘‘தொட்டதை மீளமீளவுந்தொடுவாய், புதியது காணிற் புலனழிந்திடுவாய், புதியது விரும்புவாய் புதியதை அஞ்சுவாய், அடிக்கடி மதுவினையுணுகிடும் வண்டுபோல் பழமையாம் பொருளிற் பரிந்து போய்விழுவாய், பழமையேயன்றிப் பார்மிசை ஏதும் புதுமை காணேனெனப் பொருமுவாய் சீச்சீ! பிணத்தினை விரும்பும் காக்கையே போல அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய இழிபொருள் காணில் விரைந்ததிலிசைவாய்’’ என்ற பரிதாபப்படத்தக்க மனப்பான்குடையவர்களாகவே இருக்கின்றார்கள். அதினால் இந்த வருட மகாநாட்டை எளிதாக நடத்த முடியாமல் பல இடையூறுகள் குறுக்கிட்டன. அவற்றையெல்லாம் ஒரு பொருட்படுத்தாது அல்லும் பகலும் உழைத்து இம்மகா நாட்டை வெற்றி பெற நடத்த முன்வந்த தோழர்களுக்கு நாம் மிகவும் கட்டுப்பாடுடையோம்.



தோழர் எஸ். லக்ஷிமிரதன்பாரதி எம். ஏ. பி. எல்.

நமதியக்கம் தோன்றி 7, 8 வருடங்களுக்கு மேலாகி விட்டன. இயக்கத்தைப்பற்றிக் கேள்விப்படாதவர்களையும், பேசாதவர்களையும் காணுவதற்கில்லை. ஆனால் அதன் கொள்கைகளைச் சரியாகத்தெரிந்து கொண்டவர்கள் மிகச்சிலரே என்று சொல்லவேண்டியதாகவிருக்கிறது. ஏன்? இந்த இயக்கத்தின் உண்மைக் கொள்கைகளை மறைத்தும், திரித்தும், மாற்றியும், இல்லாத பொய்களைப் புனைந்தும், எது வேண்டுமானாலும் செய்து இவ்வியக்கத்தை எவ்வகையானுமொழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் விரோதிகள் இங்கு நிரம்பியிருக்கிறார்கள். அவர்கள் சூழ்ச்சியும், தந்திரமும் உடைய கூறிய அறிவாளிகள். இத்தகைய மேதாவிகளாலேயே நாமும் நம் நாடும் இந்த நிலை எய்தியது. ஒரு ஆங்கில உத்தியோகஸ்தருடைய புத்தியை மயக்கி, அவனது தயவை சம்பாதித்து, தனது கட்சியை நிலைநாட்டவெண்ணும் ஒருவன், தனது எதிரி காங்கிரசுக்காரனென்றும் ஒத்துழையாமை இயக்கத்திற்குப்பணம் கொடாததினால் தன் பேரில் விரோதமென்றும் அந்த அதிகாரியிடம் தெரிவிக்கின்றான். ஆங்கிலநாடு சென்று பட்டங்களுடன் திரும்பி வந்தும் வருணாச்சிரமமுறையைப் பின்பற்றுகின்ற நியாயாதிபதிகளுக்கு முன் எதிரியின் பேரில் கெட்ட எண்ணம் உண்டுபண்ணுவதற்காக அவனும் அவனது சாட்சிகளும் சுயமரியாதைக்காரர்களாக தெரிவிக்கப்படுகிறது. தோழர்களே! இவர்களது கூறிய அறிவைக்கண்டு நகைப்பதா? அன்றி வியப்பதா? வெறுப்பதா? அன்றிப்பொருப்பதா? இன்னோரன்ன செய்கைகளையே இவ்வியக்க விரோதிகளும் செய்கிறார்கள். பசுவிற்காகவும் உருக்கிவிட்ட ஈயத்தைப்போல காதுகளைத் துளைக்கின்ற கொட்டுகளுக்காகவும், வேடங்களுக்காகவும், பரிவட்டங்களுக்காகவும், தென்கலை, வடகலை நாமங்களுக்காகவும் இன்னும் இத்தகைய இழிய காரியங்களுக்காகவும் தம்மை பல வகுப்பினராகப்பிரித்து தமதுடல் பொருளாவி யாவற்றையுமொருங்கே இழந்து உலகத்தை எப்பொழுதும் போர்க்களமாக்குவதற்கு காரணமாயிருக்கும் மதங்களை விட்டொழியுங்களென்றால் நாம் உடனே நாஸ்திகரென நாமம் சூட்டப்படுகின்றோம். ‘‘ஆயிரம் தெய்வங்களுண்டென்று தேடியலையும் அறிவிலிகாள் பல்லாயிர வேதமறிவொன்றே தெய்வமுண்டாமெனல் கேளிரோ, மாட்டைக் காட்டை வேடனைப்போற்றி மயங்கும் மதியிலிகாள் எதன் ஊடும் நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்றோதியறியீரோ பலபித்த மதங்களிலே தடுமாறிப் பெருமையழிவீரோ. மெள்ளப்பல தெய்வங் கட்டி வளர்த்து வெறுங்கதைகள் சேர்த்துப்பல கள்ள மதங்கள் பரப்புதற்கு ஓர்மறை காட்டவும் வல்லீரோ வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு வாழுமாந்தர் தஞ்சமென்று வணங்கிடுந்தெய்வம் தரணிமீதறிவாகிய தெய்வமொன்றேயாம். அறிவை ஒதுக்கி பிறப்பைப்பேணி அநீதிகளைப்போதிக்கும் சாத்திரக்குப்பைகளைக் கண்டிப்பதிலும் வருணாச்சிரம உயர்ச்சி தாழ்ச்சிகளையும் அதனாலாய உரிமைகளையும் கடமைகளையும் தள்ளிவிடுவதினாலும் நம்மைப்பிராமணத்துவேஷிகளாகத் தூற்றுகின்றார்கள். சாதிப்பிரிவுகளொழிந்து வாழ்க்கையின் எத்துறையிலும் எவனுக்கும் தன் உள்ளத்தனைய

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# இந்திய சகோதரிகளே! இன்னும் உறக்கமா?

## விழிமின்! எழுமின்!!

(திருமதி ஆர். அன்னபூரணி)

எனதன்பார்ந்த இந்தியச் சகோதரிகாள்! பெருந் தூக்கத்திலமிழ்ந்து கிடக்கும் அருமைத்தோழிகாள்!!

விஞ்ஞான சாஸ்திரமும் அறிவு வளர்ச்சியும், சுதந்தர தாகமும், சமதர்ம வேட்கையும் வீறு கொண்டெழும், இவ்விருபதாம் நூற்றாண்டில் நமதுநிலைமை என்ன?''நாம்ஏன் அடிமைகொள்ளப்பட்டு, கொடுமைக்குள்ளாகி நிலைகலங்கி நிற்கின்றோம்? நம்மை இந்நிலைக்கு கொணர்ந்தவை எவை? எவர்? நமதுநிலைமையைச் சீர் தூக்கி சமத்துவம், பெற்று, சரிநிகர் சமானமான வாழ்வெய்த ஏதேனும் வழியுண்டாஎன்பதைநிமிர்ந்து நோக்காமல் எங்கு உறக்கங்கொண்டிருக்கிறீர்கள்? இங்ஙனமே உறங்கிக்கிடப்பீரேல் என்றுதான் விழிப்பீர்கள்? நித்திரையினின்று என்றுதான் எழுவீர்கள்? அந்தோ! அஃதோ!! சுதந்தரச்சூரியன் வெப்பமாய்க்காய்கின்றானே! சமத்துவத்தென்றல் இன்பமாய் வீசுகின்றதே! சமதர்ம இடிமுழக்கம் காதை செவிடுபடச் செய்கின்றதே "விடுதலை, விடுதலை" என்ற ஒலி எங்கும் தொனிக்கிறதே! இப்பேரிரைச்சலில் இந்திய சோதரிகாள் எவ்வாறு உறங்குகிறீர்கள்? ஐயோ! என்று தான் விழிப்பீர்கள்!! என்று தான் விழிப்பீர்கள்!!!

என்னருமைச்சகோதரிகாள்! கண் விழித்து இப்படிச் சற்றுத் திரும்பிப் பாருங்கள்!

இதோ! ஆகாயராணி, "ஆமிஜான் சன்" ஐரோப்பாவிலிருந்து ஆஸ்டிரேலியாவுக்கு விமானத்தில் ஒரே பாய்ச்சலாகப் பாய்கின்றார்! தனது தலையின் உரோமத்தால் ஒரு பெரிய கல்லைக்கட்டி தரையிலிருந்து தூக்குகின்றார் தாராபாய்! இதோ! ஆப்கன் பார்லிமெண்டில் ஒரு துருக்கியப் பெண்மணி பொக்கிஷ மந்திரியாய் வீற்றிருக்கின்றார், ஏனைய துருக்கி மாது சிரோன்மணிகளின் வீரத்தைப் பாருங்கள்! படுதா முறையை யொழித்துமேஜுட்டுக்கு,இராணுவப் பயிற்சியும், இதரக்கலைகளும் பெற அணி அணியாகச்செல்கின்றனர்! பர்மாவைப்பாருங்கள்! மகளிரெல்லாம் வியாபாரத்துறையிலும், பத்திரிகைத்தொழிலிலும், ராஜ்ய விவகாரங்களிலும், பொதுத்தொண்டிலும், ஆண்களோடு ஒரே சமத்துவமாக புழங்குகின்றார்கள்! அந்தோ! என்னருமைமிக்க இந்திய சோதரிகாள்! உங்களுக்கு மட்டும் இன்னும் உறக்கமா?

தோழிகாள்! பொன்விளையும் நாடெனவும், புண்ணிய நாடெனவும், பெண் தெய்வங்கள் பரிபாலிக்கும் நாடெனவும் போற்றப்படும் நம் நாட்டிலே [இந்தியாவிலே) 'நமது நிலைமை என்ன?' என்பதைச் சிந்திததீர்களா? பிறந்தது முதல் இறக்கும் வரையும் நமது சமூகத்திலே நாம் கொடுமை சூழ்ந்தவர்களாகவே வாழ்ந்து வருகின்றோம்! ஏழு தருமக் கோட்டைகளைக்கட்டி அதன்பின்பு ஓர் ஆண்மகவு பிறப்பதாகவும், அந்த எழுதருமக் கோட்டைகளையும் அழித்துவிட்டு பெண் ஜென்மம் (பாப ஜென்மம்) எடுப்பதாகவும் ஒருபுறம் கூறப்படுகிறது. அந்தோ! உலகம் என்னும் ரதத்திற்கு இரு சக்கரங்கள் போன்ற ஆணுக்கும், பெண்ணுக்குமிடையில் எவ்வளவு அபாரமும், அகம்பாவமும், அக்கிரமும், அயோக்கியத்தனமுமான வித்தியாசங்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறது பார்த்தீர்களா! 'பெண்ணுகிவந்தொருமாயப்பிசாசம் பிடித்திட்டென்னைக் கண்ணுல் மருட்டுதே!' என்றொருவர் பாடி வைத்து விட்டார்! 'ஆலகால விஷத்தையும் ............நம்பலாம், சேலை கட்டிய மாதரை நம்பினுல் தெருவில் நின்று தியங்குதவிப்பரே!' என்றார் ஒரு அறிவின் பெரியார்(?) 'ஐந்து பெண்களைப்பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்றொரு பழமொழி வழங்குகிறது 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு' என்கிறார் சில அசடர் 'பேதமையென்பது மாதர்க்கணிகலம்' என்றார் ஒரு விஷமி, இன்னும் நோக்குவோமாயின் எப்புறமும் நமக்கு இழிவே கற்பிக்கப்பட்டிருக்கிறதல்லால் எள்ளளவும் புகழ் கிடையா? "சுருங்கக் கூறினுல் "ஆணுக்குப் பெண் அடிமை" என்ற அசட்டு மனப்பான்மை இந்திய மக்களிடையே வேரூன்றிப்போய்க்கிடக்கிறது. அந்தோ! இந்திய சகோதரிகாள் உங்களுக்கு இந்நிலையிலும் கவலையற்ற, வீரமற்ற, ரோஷமற்ற நித்திரையோ? வீழ்த்தப்பட்ட அடிமைப் படுகுழியினின்றும் வெளியேற மார்க்கங்காணுது உங்களுக்கு இன்னும் உறக்கமோ. சகோதரிகாள் விழியீர்களா? நம்மைப்பிணைத்திருக்கும் அடிமைச்சங்கிலியைத் துண்டுதுண்டாய்த் தகர்த்தெறிந்து நாம் விடுதலை பெருவண்ணம், போட்டிருக்கும் மூடநம்பிக்கைகளால் முள்வேலியை சுட்டெரித்து 'வீரமுழக்கங்கொண்டு' சமத்துவம் பெரும்வரையில் சமதர்மப்போரில் சலியாதுழைப்போம்' எனக்கங்கணம்கட்டி "பட்டங்களாளவுஞ்சட்டங்கள் செய்யவும், பாரினிலே பெண்கள் வந்துவிட்டோம்" என்னும் பொன்மொழியை மெய்ப்பித்து "தாதரென்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டினிலே, என்னும் நன்னிலையெய்த இன்று முன்வரமாட்டீர்களா?

மேற்குறித்த விதமாய் நம்மை இழிவுபடுத்தும் ஈரமற்ற, சுயநல வஞ்சகக்கன்னெஞ்சத்தார்க்கு பெண்கள் பாபஜென்மங்கள், எழுதருமக் கோட்டைகளை அழித்து பிறக்கிறது பெண், என்னும் பாபிகளுக்கு 'எந்த எழு தருமக்கோபுரங்களை அழித்துப் பிறந்தது? புண்ணிய ஜென்மங்களான ஆண் எந்த எழுதருமக்கோட்டைகளைக்கட்டிப்பிறந்தது? இத்தகைய இமயமலையத்தனை உயர்வுள்ள ஆண்களாகிய நீங்கள் எந்த புண்ணிய ஜென்மத்தில் உதிரத்தில் ஊறிப்பிறக்கிறீர்கள்? எவர் மடியில் தவழ்கின்றீர்கள்? யாருடைய போஷிப்பில் வளர்ந்து வாலிபப்பருவத்தையடைகின்றீர்கள்? யாரை மணந்தின்புருகிறீர்கள்? இப்பெருமையனைத்தும் சேர்வதுபெண்பாலையேயன்றோ? பெண்களென்றவுடன் பாபஜென்ம பல்லவி பாடும் பண்டிதர்களே! பாப ஜென்மமாகிய பெண், பாபஜென்மமாகிய பெண்வயிற்றிலேயே பிறக்கிறது! ஆனல் புண்ணிய ஜென்மங்களாகிய நீங்கள் (ஆண்கள்) புண்ணிய ஜென்மமான எந்த ஆணின் வயிற்றில் பிறக்கின்றீர்கள்? எந்த ஆணிடம் பாலருந்துகிறீர்கள்? எடுத்ததற்கெல்லாம் சாத்திர நியாயதர்க்கம் பேசும், தர்க்க நூல்வல்லோரே! எழுதருமக்கோபுரங்களைக்கட்டி பிறக்கும் இமயமலையத்துணை உயர்வுள்ள ஆண்ஜென்மங்களாகிய நீங்கள் எழுகோபுரங்களை இடித்துப் பிறக்கும் மாபெரும் பாபஜென்மங்களாகிய பெண்கள் வயிற்றில் பிறப்பது எந்த நியாயத்தைக்கொண்டு? பெண்கள் உதிரத்திலேயே (கருப்பத்தில்) ஊறிவளர்வது எந்த நியாயத்தைக்கொண்டு இவற்றிற்குத்தக்க நியாயமாக பதில் தரும்படி உங்களை அழைக்கின்றேன்.

உலகானுபவத்தில், இல்லறவாழ்வில், பெரும்பங்கெடுத்துக்கொள்வோர்பெண்மணிகளே! ஒழுக்கத்தில் சிறந்தவர் அவர்களே! உலகானுபவ விர்த்திக்கு நாயகமணிகளாய் ஒளி தருபவர் பெண்களே! பொருமைக் கிருப்பிடமாய்ப் பொலிபுரும் பெண்களே! இவற்றை எவரே மறுக்கவல்லார்? பயனளியாது பாழாய்க்கிடக்கும் பெருநிலத்தையொப்பர் ஆடவர். ஆனல் செழுமைமிகுபயிர்களைத்தாங்கி தானிய மணிகளை நல்கும் நன்செய் நிலங்களையொப்பர் பெண்டிர்! கனிகொடாது வறிதேநிற்கும் 'பாதிரி' மரத்தையொப்பர் ஆடவர்! மணந்தருதீங்கனி நிறைமரமொப்பர் பெண்டிர்! இவற்றில் எது சிறப்புடைத்து? அறிஞரே! ஆராய்ந்துரைமின்! புகழ்மணக்கும் பெண்மணிகாள் இத்துணைப்பேற்றை இயல்பில்பெற்ற பெருமை சேர் பெருஞ் சமூகத்தவராகிய நீங்கள் இவை யொன்றையுங் கருதாது, அந்தகார இருளில் அழுந்தி ஆழ்ந்து நித்திரை செய்கின்றீர்களே! இதுசரியோ?

அந்தோ! பொறுப்பும், சகிப்பும், தனி இனிப்பும் குடிகொண்டு "எம் கடன்பணி செய்து கிடப்பதே" என்று சமூக வாழ்வின் பேருபகாரிகளாய் விளங்கும் பெண்மக்களை, தாய்மார்களை, "பாபஜென்மங்கள், அடிமைகள். அறிவிலிகள், ஆண்மை 'பலம்' அற்றவர்கள், பேய்கள்," எனவைது, மக்கள் உயிரைக்கொள்ளை கொள்ளும் பெரும் பிணியின், கொடியவர்களாக மதித்து, "சேய்கொண்டாரும் செங்கமலப்பாய் கொண்டாரும் பணியும் பட்டீச்சுரத்தானே!—நோய் கொண்டாலுங் கொள்ளலாம், நூறு வயதளவும் பேய்கொண்டாலுங்கொள்ளலாம், பெண் கொள்ளலாகாதே!" எனப்புலம்பி வைத்திருக்கும் செய்நன்றி கொன்ற ஆடவரின் மதிதானென்ன! அவர்களது உள்ளக்கிடக்கையின் கொடுமை தானென்னே! அந்தோ! கொடுமை! கொடுமை!! கொடுமையிலுங்கொடுமை!!!

பெண்டிராகிய நம்மை உயர்த்தி இமயமலையின் மேல்கொண்டு போய் விடக் கேட்கின்றோமா? அன்றி, "நாங்கள் ஆடவரிலும் மேலானவர்கள், ஆதலின், ஆடவர் எங்களுக்கு அடிமை பூண்டொழுக வேண்டுமென்று கூறுகின்றோமா? இல்லையே. அந்தவைதீகக் கட்டுப்பாடுகளால் வனிதாசிரோன்மணிகள் வாடி வதங்க நேரிடுகிறது. அர்த்தமற்ற அம்மிருகக்கட்டுப்பாடுகள், அரிவையர்மேல்; ஆதிக்கஞ் செலுத்துகின்றன; அடிமைப்படுகுழியில் ஆழ்த்துகின்றன, இன்னுங்கீழே ஆழ்ந்துகின்றது! கணவன்குடும்பத்தார் சித்திரவதைசெய்தாலும் கேள்விமுறையில்லை! அத்தண்டனை பெற, "நான்செய்தகுற்றமென்ன?" எனக்கேட்க உரிமையில்லை! நியாயத்தைக்கூறவாய்திறக்கினும் "பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்" என்ற பெருவிலங்குவாய்ப்பூட்டிடுகிறது! சொத்துரிமையில்லை, கோடீஸ்வரனுக்கு வாழ்க்கை பட்டிருந்தாலும் குழந்தையற்ற தன்மையில் விதவையாகி விட்டால், கணவனின் சொத்தில், கால் தூசிக்கும் பாத்தியதைஇல்லை! பெண்டிரெல்லாம் ஆடவரின் பரம்பரை அடிமைகளென அசட்டுப் பழக்கம் போதிப்பதால், பெண்ணை, மிருகம் போன்று பிறனிடம் பணம் பெற்று விற்றுவிடவும் இடமிருக்கிறது! வைதவ்யக்கொடுமை சகிக்கத்தக்கதாயில்லை! வைதீகரின்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு.

## வரவேற்பும்—நிகழ்ச்சியும்.

17—7—32 தேதி காலை 9-மணிக்கு ஏற்கனவே பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் மூலமாக அறிவிக்கப் பட்டிருந்தபடி, இராமனுதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு, புதுவை பிரஞ்சு அரசாங்க, வரவு செலவு இலாகா, உபதலைவர் தோழர் ஏ. வி. முத்தையா, பி. ஏ. பி. எல். அவர்களின் தலைமையில், ஸ்ரீ வெற்றி விநாயகர் தியேட்டரில் கூடியது. அவ்வமயம் வெளியூர்களினின்றும், உள்ளூரினின்றும் பெருந்திரளான மக்கள் மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தனர். சிறப்பாக, சென்னை, தஞ்சை, நாகை, திருச்சி, லால்குடி, கண்டனூர், கோட்டையூர், பள்ளத்தூர், கானடுகாத்தான், திருமயம், புதுக்கோட்டை, திருப்பத்தூர், விருதுநகர், மதுரை, முதலிய விடங்களிலிருந்தும், பிரதிநிதிகள் வந்திருந்தனர். மகாநாட்டில் தோழர்களான டி. துரைசாமி, டி. எம். முத்து, பூமிநாதன், என். வி. ராஜன், ச.ம.சி.பரமசிவம், டி. வி. சோமசுந்தரம் பி. ஏ. பி. எல்., கே. எம். பால சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்., டி. எஸ். ராமானுஜம் பி. ஏ. பி. எல்., குருசாமி பி.ஏ. குஞ்சிதம் பி. ஏ. எல். டி. நீலாவதி ராமசுப்பிரமணியம், புதுவை லகாவ்ஷ் தம்பதிகள், எஸ். இராமச்சந்திரன் பி. ஏ. பி. எல்., சசிவர்ணம், அ. பொன்னம்பலம், கே.வி.அழகிரிசாமி, சகஜானந்தம் எம். எல். சி. திரு. வயிசு ஷண்முகம், மு. அருணாஜலம் செட்டியார், ஈப்பன் பி. ஏ. பி. எல். லட்சமிரதன் எம். ஏ. பி. எல்., குருகுல ஆசிரியர் ஆத்மாராம், போஷகர், சுப்பையாசெட்டியார், டாக்டர் மதுரநாயகம், ராயபுரம், கதிரேசன் செட்டியார், ராம. அன. சி. அண்ணாமலை செட்டியார், அண்ணாமலை, கணபதி, செல்லப்பா, எசனை-பிச்சையா, அ. பரமசிவம், என். பி. காளியப்பன், சி. மு. அரு. நா. அருணாஜலம் செட்டியார், (ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்) சபி. ந. மு. இப்ரகீம் ராவுத்தர் (முனிசிபல் கவுன்சிலர் காரைக்குடி) தியாகராஜன் செட்டியார், (முனிசிபல் கவுன்சிலர் காரைக்குடி) பின்னவாசல் என் எஸ். சதாசிவம், புதுவை பாரதி தாஸன், சொக்கலிங்கம், வெங்கடாஜலம், பழனியப்பன், அரு, ஆ. சொக்கலிங்கம் தம்பதிகள், நமசிவாயன், திருமயம், ராம சின்னையா, விசாலாட்சி, ராம சுப்பையா, திரு. வேடப்பா, அற்புதசாமி, ராமனாதன், முதலிய முக்கியஸ்தர்களும், திருமதிகளான விசாலாட்சி, பார்வதி, வள்ளியம்மை, மெய்யாத்தாள், பாக்கியம், அழகம்மை முதலியோர்களும் மகாநாட்டில் காணப்பட்டனர்.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம், சாமி சிதம்பரனார், கே. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். இந்திராணி பாலசுப்ரமணியம், திராவிடன் ஆசிரியர், டி. வி. சுப்ரமணியம் ஈ. வெ. ரா. நாகம்மாள், அன்னபூரணி-ரத்தினசபாபதி முதலியோர்களிடமிருந்து, வாழ்த்துச்செய்திகள் மகாநாட்டாருக்கு கிடைத்தது.

முதன் முதலாக, வரவேற்புக் கழகத்தின் சார்பாக, தேவகோட்டை வக்கீல் திரு. எஸ். லட்சுமிரதன் எம். ஏ. பி. எல். அவர்கள், பிரதிநிதிகளை வரவேற்று பிரசங்கம் செய்த பின், (பிரசங்கம் வேறு பக்கம்) மகாநாட்டு தலைவர் தேர்தலின் போது, தலைவர், ஏ. வி, முத்தையா பி. ஏ. பி. எல். அவர்களை, தோழர்கள்— சென்னை, எஸ். குருசாமி பி. ஏ., ஏ. பொன்னம்பலம் எஸ். இராமச்சந்திரன் பி. ஏ. பி, எல். (சிவகெங்கை) ராமசுப்ரமணியம், கானடுகாத்தான், திரு. வயிசு. ஷண்முகம் முதலியோர்கள் அறிமுகம் செய்வித்து, சில மணிநேரம் பேசினார்கள். பின்னர் தலைவரவர்கள் முகவுரையாக சுமார் அரை மணி நேரம் சுயமரியாதை இயக்க கொள்கைகளைப் பற்றியும் எதிர்காலவேலைத் திட்டங்களைப்பற்றியும், பேசினார். (பிரசங்க விபரம் சென்ற வாரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.) தோழர் எஸ். குருசாமி பி, ஏ. அவர்கள் தலைவர் முகவுரைக்குப்பின் சபையோருக்கு உணர்ச்சி ததும்பும் முறையில் சில மணிநேரம் பேசிய பின் மீண்டும் மகாநாடு 3 மணி சுமாருக்கு கூட்டப் பெற்றது; அதுபோது தோழர்களான, சிவகெங்கை வக்கீல் எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். திருச்சி, டி. வி. சோமசுந்தரம், பி. எ. பி. எல். கே. எம். பால சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். டி. எஸ். ராமானுஜம் பி. ஏ. பி எல், குஞ்சிதம் பி. ஏ. எல். டி. குருசாமி பி. ஏ. சசிவர்ணம், நாகை என். பி. காளியப்பன், பட்டுக்கோட்டை தோழர் அழகிரிசாமி, நீலாவதி ராம சுப்பிரமணியம் முதலியோர் நீண்ட நேரம் அரும்பெரும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள், மகாநாட்டிடையில், காங்கிரஸ்காரர்களில் இரண்டொருவர் மகாநாட்டில் தோன்றி, குழப்பம் செய்வான் வேண்டி விஷமத்தனங்களை ஆரம்பித்தனர். ஆனால் அவர்கள் எண்ணம் பலிக்கவில்லை. இறுதியாக மகாநாட்டில், இந்நகரத்தின் சுற்றுப்புற கிராமங்களிலுள்ள ஆதிதிராவிட மக்களின் குடிசைகள் கொள்ளை யடிக்கப்பட்டு கொடுமைப் படுத்துவதை, இந்த ஜில்லா அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி இருந்தும் அதிகாரிகள் கவனிக்காதிருப்பது பற்றி வருந்துவதாயும், இனி அதிகாரிகள் கவனித்து நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களென மகாநாட்டார் நம்புவதாகவும், சென்ற வருஷ முதலாவது மகாநாட்டின் தீர்மானங்களை இம்மகாநாடு ஆதரிப்பதுடன், அத்தீர்மானங்களை நடைமுறையில் தோழர்கள் கொண்டு வரும்படி நம்புவதாகவும் ஆக இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. பின்னர், அ. பொன்னம்பலம் அவர்களால் வந்தனோபசாரம் கூறி மலர் மாலை சூட்டப் பெற்று மகாநாடு இனிது முடிந்தது. (நமது நிருபர்.)

---

## கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

17—7—32 நாள் ஞாயிறன்று மாலை 7-மணிக்கு ஷை சங்க மகா சபைக்கூட்டமொன்று சங்கக்கட்டிடத்தில் சங்கத்தலைவர் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். கே. கஸ்தூரி, சேலம் எ. சித்தையா, ஆகியவர்கள் சுயமரியாதை கீதங்கள் மிக இனிமையாகப் பாடினார்கள்.

பின்னர் சங்க இரண்டாவதாண்டு (1932-33) க்கு நிர்வாகக்கழக உறுப்பினர்களும், உத்தியோகஸ்தர்களும், தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைவராகவும், தோழர்கள் பி. எம். ஜங்கமையா, ஆர். நஞ்சையா ஆகியவர்கள் உபதலைவர்களாகவும், ஆர். கிஸன் அவர்கள் காரியதரிசியாகவும், சி. செல்வராஜ், வி. சுப்பிரமணியம் ஆகிய இருவரும் உதவிக்காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்று டாக்டர் நாயர் திருநாளாகையால் அவரதுவாழ்க்கையைப்பற்றியும், அவர் பார்ப்பனரல்லாதாருக்காற்றிய எண்ணருஞ்சேவையைபற்றியும் தோழர் சேலம் சித்தையா அவர்கள் மிக விளக்கமாகப் பேசினார்கள். அதைத் தொடர்ந்து தோழர் எச். எல். முனிசாமி அவர்கள் பேசினார். தோழர் ஆர். கிஸன் அவர்கள் அதுபற்றிச் சிறிது பேசிவிட்டு கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரரேபிக்க தோழர்கள் வி. செகப்பண்ணன், பி. இரங்கசாமி, எச். எல். முனுசாமி அவர்கள் ஆமோதிக்க ஏகமனதாய் நிறைவேறியது.

"பலதுறைகளிலும் பார்ப்பனர்களால் கொடுமைப்படுத்தப்பட்டு உரிமையிழந்து, வீழ்ச்சியடைந்து உணர்ச்சியொடுங்கி உறங்கிக்கிடந்த பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களைத்தட்டி எழுப்பிப் புத்துயிரளித்து உணர்வூட்டி யவர்தம் உரிமை நாட்டக்கடல்கடந்து இலண்டன் பாராளுமன்றம் பரிந்து சென்று ஆங்கே நம்மவர்க்காயுயிர் நீத்த உயர் குணத்தோன்றல், பொது நலப்பிரியர், பெரியார் டாக்டர் டி. எம். நாயர் பெருமானவர்கள் பொதுவாகத் தென்னாட்டுக்கும், சிறப்பாகப் பார்ப்பனரல்லாதாருக்கும் ஆற்றியுள்ள அருஞ்சேவையை இச்சங்கம் பெரிதும் பாராட்டுவதோடு இதுபோழ்துள்ள பார்ப்பனரல்லாத தலைவர்களும், தொண்டர்களும், அப்பெரியாரின் அடிச்சுவட்டைப்பின்பற்றிப் பணியாற்றும்படி கேட்டுக்கொள்ளுகிறது".

பின்னர் கோவைப்பிரபல பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களும், பொதுநலப் பணியாளர்களுமாகிய தோழர்கள் வி. வெரிவாடய்யா, எஸ். என். பொன்னையா (ஜில்லா போர்டு உபதலைவர்) எம். பரமேஸ்வரன், (முனிசிபல் கவுன்சிலர்) எ. கிருஷ்ணசாமி பி. எ., ஆகிய நால்வர்களையும் சங்க ஆதரிப்பாளர்களாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று ஏகமனதாய் நிறைவேறியது. தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 9-30 மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது என காரியதரிசி அறிவிக்கிறார்.

## சுயமரியாதைத் திருமணம்.

அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் திரு. ப. சொ. பகவதிசெட்டியார் அவர்களின் தமயனார் புதல்வர் திரு. ராமச்சந்திரன் அவர்கட்கும், திரு. மூக்கஞ்செட்டியார் புதல்வி திரு. நிறைச்செல்வி மீனம்பளுக்கும் 13-7-32 ந்தேதி இவ்வூர் தேலுங்கர் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் திரு. மல்லையா அவர்கள் தலைமையில் எவ்வித சடங்கும், மூடப்பழக்க வழக்கங்களையொழித்து சிக்கனமுறையில் சீர்திருத்தத்திருமணம் நடைபெற்றது. அதுபோது ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர். பின் மணமகனுக்கு திரு. சோ. வி. ரு. சோமசுந்திரம் அவர்கள் நன்கொடையாக ரூபாய் இருபத்தைந்து கொடுத்தார். அதை மணமகன் கல்விக்காக நன்கொடையாக அளித்தாரெனவும். மணமக்களைப்பாராட்டி திரு கல்யாணிசெட்டியார் சொற்பொழிவாற்றியதாகவும் ஒருநிருபர் எழுதுகிறார்.

(குறிப்பு: ) இப்பக்கத்துக்கு இந்தச் சீர்திருத்தமணம் தேவாங்க செட்டியார்கள் என்று சொல்லப்படும் ஜாதியில் முதலாவதென்றே எண்ணுகிறோம். இத்தகைய வழிகாட்டியாய் விளங்கிய மணமக்களின் தைரியத்தையும், இக்கல்யாணத்திற்குகாரணஸ்தர்களாயிருந்த அன்பர்களையும் பெரிதும் பாராட்டுகிறோம். இத்தகைய மணங்கள் ஏராளமாய் நடத்துவிக்க நமதன்பர்கள் முயற்சிப்பார்களாக (ப—ர்.)

# ஆஸ்திகத்திற்கு, "ஐ. பி."

(தோழர் அ. இரத்தினசபாபதி)

ஆஸ்திகத்திற்கு "ஐ. பி" என்ற இத்தலைப்பைக்கண்டவுடன் ஆஸ்திக அன்பர்கள் பல்லைக்கடிப்பார்களென்பதை நாமறிவோம். ஆனால் இவர்கள் பல்லைக் கடித்தாலுஞ்சரி, நெல்லைப்பொரித்தாலுஞ்சரி, நாமென்னவோ "ஆஸ்திகத்திற்கு ஐ. பி." என்று மிக்க பலமாய்க் கூறவேண்டியதாகத்தானிருக்கிறது! அத்துடன் 'இந்தியா ஆஸ்திகத்திற்கு ஐ. பி. கொடுக்காதவரையில் மற்றெல்லா சுகபோகங்களுக்கும் 'ஐ. பி.' கொடுத்துக்கொண்டுதானிருக்கு" மென உறுதியாகக்கூறவும் கடமைப்பட்டிருக்கிறோம். இதன் உண்மையைச் சற்றுப்பகுத்தறிவுடைய எவரும் நன்கறியலாம் எல்லாமதங்களும் "கடவுள் ஒருவர் உண்டு, அவர்தான் இந்த உலகத்தைப்படைத்தார்" என்று நம்புகின்றனவாயினும், நமது நாட்டிலுள்ள 'ஹிந்துமதம்' அந்தக்கடவுள் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையும், பக்தியும அளவிட்டுக்கூறமுடியாது. இதையும் மிகச்சாதாரணமாக எல்லோரும் அறிவர். மனிதனுக்குக் 'கடவுள்' உணர்ச்சி ஏற்பட்ட காலந்தொட்டு இந்த நிமிஷம் வரையிலும் இந்நாடு கடவுளிடத்தில் பயபக்தியுடனும், விஸ்வாசத்துடனும், பணிவுடனும் தான் நடந்து வந்திருக்கிறது. திரிகரண சுத்தியாகவும் கடவுளிடம் பக்தி செலுத்தி வந்திருக்கிறது. அதாவது மனதிலும் கடவுள்பக்தி நிரம்பியே இருந்தது. வாக்கிலும் அப்படியே, இதற்காதாரமாகக்காட்ட கடவுளைப்புகழ்ந்து பக்தர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கும் பதிகங்களும், தேவாரத்திருவாசகங்களும், பிரபந்தங்களும், மந்திரச்சுவடிகளும், வண்டிவண்டியாயிருக்கின்றன பின்னர் காயம், இதிலும் விசேஷபக்தி காட்டப்பட்டிருக்கிறது அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்த கடவுளுக்கு எத்தனை கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன? எத்தனை கோபுரங்கள் எழுப்பப்பெற்றிருக்கின்றன? எத்தனை வித பூஜை நெய்வேத்தியங்களும், பக்ஷண பலகாரங்களும், அபிஷேக ஆராதனைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

எத்தனை தேரோட்டங்கள், எத்தனை தெப்போற்சவங்கள், எத்தனை திருக்கல்யாணம், எத்தனை மகாமகங்கள், எத்தனை யாகங்கள், எத்தனை தான தருமங்கள், எத்தனை தீர்த்த யாத்திரைகள், இவையெல்லாம் நமக்குக்கடவுளிடத்திலுள்ள பக்தியை "காய"த்தால் (தேகத்தால்) வெளிப்படுத்துவனவல்லவா?

இத்தனை விதமாகவும் நமது கடவுள் பக்தியை மனோவாக்குக் காயத்தால் நடத்திக்காட்டினோம், காட்டி வருகிறோம், இதற்காக எழுதப்பட்டிருக்கும் நூல்களான திருமறைகளின்படி நடந்து அச்செயலுக்கு 'ஆஸ்திகம்' எனவும், அதன்படி நடப்போருக்கு 'ஆஸ்திகர்கள்' எனவும், நாமமிட்டு நடந்து வந்திருக்கிறோம் 'கடவுள்' என்னும் சொல் பிறந்த காலந்தொட்டே ஏன்? அவ்வுணர்ச்சி உண்டான நிமிஷந்தோட்டே நம் மக்கள் பரமபக்தர்களாய், ஆஸ்திக அன்பர்களாய், திரிகரண சுத்தியாய், பட்டுப் பணிந்து நடந்து வந்தும் 'ஆஸ்திக நாடு' என்று இந்நாட்டைத் தாங்களே பெருமையாகப் பேசிவந்தும், நடந்ததென்ன? இங்குதான் வெளிப்படுகிறது வெளிச்சம்!

கடவுள் பக்தர்களாய் விளங்கிய பழந்தமிழ்ப் பெருங்குடி மக்களை ஆரியர்கள் ஏமாற்றி அடிமைகொண்டார்கள். இது ஆஸ்திகம் கொடுத்த முதல் பலன் அடுத்தபடி உள் நாட்டுக்கலகம், தெற்கே பார்த்தால் சேர, சோழ பாண்டியர்கள் அடிபிடி சண்டை, வடக்கே பார்த்தால் பீஷ்வா, பான்சலே, ரஜபுத்திர அரசர்கள் சண்டை, இவ்வாறு நாடெங்கும் சச்சரவு, கலகம், இரத்தப்பிரவாகம் கொடுங்கோன்மை!

பின்னர் மகமதியர், பட்டாணியர், மொகலாயர் படையெடுப்பு கஜினீமுகமதின் ஆர்ப்பாட்டம்! ஆலயச்சொத்தும், ஆஸ்திகர்களின் பெண்டு பிள்ளைகளும் கொள்ளை, சாமி விக்கிரகங்கள் தவிடுபொடி, பின்னர் ஔரங்கசீபின் தர்பார்! 'இஸ்லாமா—கத்தியா?' என்ற கேள்விக்கு இந்து ஆஸ்திகர்கள் பதிலிறுக்கவேண்டியதிருந்தது. சரியானசுகாதாரமில்லாமலும், நோய்தீர்க்க வகையறியாமலும், காலரா, பிளேக், அம்மை, விஷஜுரம் இவற்றின் பாதை, இடையில் மழையில்லாது கொடும் பஞ்சம், அதன்பிறகு வெள்ளையர் பிரஞ்சுக்காரர் அமனி, இறுதியில் வெள்ளைக்காரருக்கு அடிமை. அந்நிய நாட்டினரிடம் 'இந்தியர்கள் சுத்த மௌடீக முண்டங்கள், அறிவற்றவர்கள், காட்டுமிராண்டிகள், அடிமைகள், !நெல்லிக்கனி மூட்டைகள், காக்காய்க்கூட்டங்கள்' என்று பெற்ற பட்டங்கள்! எக்காலத்தும் வறுமை. ஆகிய இவைகள்தான் இந்நாட்டு பழைய சரித்திரத்தில் காணப்படுகின்றன. இதை எந்த ஆஸ்திகப் பிராணியும் அல்லவென்று மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

இவ்விதக் கஷ்டங்களுக்கெல்லாம் தன்னுடைய பக்தகோடிகள் ஆளாகி அல்லலுறுவதைக்கண்டு அந்தசாமிகள் வந்து எந்தவிதமான பரிகாரமும் இன்றைய வரையில் செய்யவில்லை. இது எனிப்படி என்று வைதீகப்பெரியாரை வினவினால் முதலில் கேள்விகேட்பவரை ஓர் முறை ஏற இறங்கப்பார்க்கிறார், பிறகு 'இம்மாதிரிக்கஷ்டங்கள் ஏற்பட்டபோதெல்லாம் சாட்சாத் எம்பெருமான் திருஅவதாரம் செய்து துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனம் பண்ணியிருக்கிறார்' என்று பதிலிருக்கிறார். இது புராணக்கதை இவர் கூற்றிற்கு ஆதாரம் புராணங்களில் தானிருக்கிறது, அதுவும் இந்த யுகத்தில் நடந்ததாகவில்லை, தருமதேவதை தனது நான்கு கால்களாலும் மூன்று கால்களாலும் நடந்த திரேதாயுகம், துவாபரயுகம் ஆகியவற்றில். ஆனாலிந்தக்கலியுகத்தில் அப்படியொன்றும் காணோம்! ஆராய்ச்சிக்குட்பட்ட சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் நாம் மேலே விவரித்துள்ள சொல்லொணுத்துன்பங்கள்தான் நமது ஆஸ்திக சிகாமணிகளுக்குப்பரிசாகக்கிடைத்ததெனத் தெரிகிறது!

மேலும் வைதீகர்களும் எல்லாப் பார்ப்பான்களுமே ஆஸ்திகம் கெட்டுவிட்டதெனக்கண்ணீர் வடிக்கிறார்கள், உண்மைதான்! ஆனால் இவர்களது இந்த ஆஸ்திகப் பொக்கிஷம் எதனால் குறைந்தது, எவரது செயலால் குறைக்கப்பட்டதெனப் பார்த்தால்—கேட்டால், வைதீகர்கள், பார்ப்பனர்கள், சீர்திருத்தவாதிகள் மீது குறைகூறுவர். ஆனால் நாம் அக்குறையை அவர்களே வைத்துக் கொள்ளவேண்டுமெனக் கூறுகிறோம்.

இவர்களது ஆஸ்திகம் எப்படிக் கெட்டது? பார்ப்பான் பார்ப்பன தர்மப்படி நடக்கவேண்டும். ஆனால் அவன் இன்று என்ன செய்கிறான்? காபி ஹோட்டலில் 'கப்' கழுவும் உத்தியோகம் முதல் சிம்லா உச்சிக்குக் கீழ் உள்ள உத்தியோகம் வரையில் நுழைந்து கொண்டிருக்கிறான். பார்ப்பான் கப்பலேறினால் ஆஸ்திகம் பாழாகிவிடுமென்பது சாஸ்திரம். ஆனால் ஒருமுறையல்ல ஒன்பது முறை கப்பலேறிய பார்ப்பனரும் இன்னும் 'சாஸ்திரியார்' என்ற பட்டத்துக்குக்கூடச் சிறிதும் பங்கமில்லாமலே பார்ப்பனக் கூட்டத்திலிருக்கிறார். பார்ப்பான் அரிசி விற்கக் கூடாதென்பது சாஸ்திரம். ஆனால் அரிசி வியாபாரம் செய்யும்........ ஐயர்மார்களில் யாரும் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்படவில்லை. பிராமணன் மூன்றுவேளைச் சாப்பாட்டிற்குமேல் வீட்டில சாமான்கள் சேகரித்து வைத்துக்கொள்ளக் கூடாதென்பது வேதவிதி. ஆனால் ஊரில் பஞ்சமேற்பட்டு மற்றவர்கள் பட்டினி கிடந்தாலும், பார்ப்பான் வீட்டில் மாத்திரம் எப்படியோ மூன்றுவேளைச்சாப்பாடும், இடைவேளைச்சித்திரான்னமும் நடைபெறுகிறது, அதற்குத்தக்கபடி உணவுப் பொருள்கள் எவ்வகையாலேனும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. பிராமணன் சந்தான விருத்திக்காக முறைப்படி ஒரேபெண்ணை மணந்து, ஒரே குழந்தையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பது சாஸ்திரக்கட்டளை. ஆனால் இன்று ஊரிலுள்ள தாசிகளுக்கு மாமா உத்தியோகம் பார்ப்பது வரையில் பார்ப்பான் இறங்கி விட்டான், இவ்வாறெல்லாம் பிராமணன் சாஸ்திர விதிதவறி நடந்ததால் அவர்களது ஆஸ்திகம் கெட்டுப்போயிருக்கலாம்.

இன்னும் மற்ற வைதீகர்கள் தங்கள் கடவுளையே நம்புவதில்லை. ஏனெனில் 'குடுக்கிறதெய்வம் கூரையைப்பிய்த்துக்கொண்டு கொடுக்கும்' என்பது வைதீகப்பழமொழி, ஆனாலிவர்கள் அதை நம்பி நடுவீட்டில் படுத்து வாயைப்பிளந்து கொண்டு, கடவுளை துதிபண்ணிக்கொண்டு, கூரையைப்பிரித்துக்கொண்டு சாப்பாடு ஏதாவது விழுகிறதா என்று பார்த்திராமல் பலதுறைகளிலும் மணம் சம்பாதிக்க முயன்று விட்டார்கள், மற்றும் புராணங்களிலும் இவர்கள் நம்பிக்கை அற்றுப்போய் விட்டது. உதாரணமாக விநாயகர் புராணத்தில் அப்புராணத்தை யாரேனும் படித்துவிட்டாலுஞ்சரி, அல்லது பிறர் படிக்கக்காதுகளால் கேட்டாலுஞ்சரி, அதுவும் முடியாதவர்கள் விநாயக புராணத்தைப்படித்தவர்களைக் கண்ணால் கண்டுவிட்டாலுஞ்சரி, உடனே அவர்களது பாபங்களெல்லாம் ஒழிந்து, புண்ணியமெல்லாம் வீடுதேடி வருமென்றும், இன்னும் அஷ்டமாசித்திகளும் சகலவிதக் கல்விகளும் கைகூடுமென்றும், கற்பக விருட்சம் காமதேனு முதலியவைகள் வீடுதேடி வந்து ஏவல் புரியுமென்றும் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

பக்தர்களாகிய வைதீகர்களுக்கு உண்மையான பக்தியும் புராணங்களில் நம்பிக்கையுமிருக்க வேண்டிய தவசியம். விநாயக புராணத்தையும் நம்பி அதன்படி நடந்தால்தான் உலகில் ஆஸ்திகம் நிலைநிற்கும். அதன்படி பார்த்தால் வைதீகர்கள் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்பவேண்டியதில்லை. கடல்கடந்து அயல்நாடு சென்று ஐ. ஸி. எஸ். பரீட்சை கொடுக்கவேண்டியதில்லை.—விநாயக புராணத்தைப் பூசித்துக் கொண்டிருந்தாலே சகல கலைக்கியானங்களும் அந்தப்பிள்ளைகளுக்குச் சித்தியாகிவிடும். மேலும் இந்தபக்தர்கள் பணந்திரட்டுவான் வேண்டி உத்தியோகம்செய்யவேண்டியதில்லை. ஏனெனில் கற்பக விருட்சம் வலிய வந்து இவர்களுக்குத்தேவையானதையெல்லாம் தரும்! காமதேனுவந்து பத்து வகைக்கறியும், பதினெட்டு வகை பச்சடியும் ஆக்கிப்படைத்து அமுதூட்டும். இன்னும் அஷ்டமாசித்திகளும் கிடைக்கும். தருமம் செய்யவேண்டியதுமில்லை, விநாயக

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

# அரண்மனை நெல்லுக்கு பெருச்சாளி காவலா?

இரு மூன்று மாதங்களாக சென்னை தினசரிப் பத்திரிகைகளில் "சமூக முன்னேற்றச் சங்கம்" என்னும் தலைப்பின் கீழ் நீண்ட செய்திகள் பத்தி பத்தியாக வெளி வந்து கொண்டிருக்கின்றன. பொது ஜன முன்னேற்றத்தில் ஆர்வமுடையார் அச்செய்திகளைப் படிப்பார்களே யானால் அந்த சங்க வளர்ச்சியில் ஆசை கொள்ளாதிருக்க முடியாது. அச்சங்கம் ஏற்படுத்துவதற்குக்காரண மென்ன வென்பதையும், அதன் நோக்கங்கள் என்னென்ன வென்பதையும், அது செய்யப் போவதாகச் சொல்லப்படும் வேலைத்திட்டம் யாது என்பதையும் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ள அறிக்கை மூலம் அறிந்ததும் நாம் அடைந்த பெருமகிழ்விற்கு அளவில்லை. நமது பிரதான நோக்கமே தமிழ் மக்களின் சமூக வாழ்க்கை முறைகளையும், ஒழுக்க நெறிகளையும் திருத்தி அமைக்க வேண்டும் அல்லது அழித்துப் புதுப்பிக்க வேண்டுமென்பதாதலால் நமது பசிக்கு இரை போடுந் தன்மையில் கொள்கைகளும், வேலைத் திட்டங்களும் அமைந்த சமூக முன்னேற்றச் சங்கத்தைப் பற்றிய செய்தியைக் கண்டு மகிழ்வுறாதிருக்க முடியுமா?

இந்த சங்கம் நிருவப்பெறுகிற காலத்தில், ஆரம்பக் கூட்டத்திற்கு வந்திருந்தோர் மிக மிக சொல்ப தொகையினராக விருந்தாலும் கோவை ஜில்லா போர்டு தலைவர். தோழர் திவான்பகதூர் சி. எஸ். ரெத்தினசபாபதி முதலியார், திருச்சி ஜில்லா போர்டு தலைவர். டி. எம். நாராயணசாமிபிள்ளை, சர். டி. தேசிகாச்சாரியார் முதலிய பிரபலஸ்தர்களும் கலந்திருந்ததாக அறிந்ததும், இச்சங்கத்தைப்பற்றி அப்போதே நமக்கோர் பிரேமை ஏற்பட்டது. பிறகு தமிழ் தினசரிப் பத்திரிகைகள் ஒன்றில் கூட தவறாமல் இச்சங்கத்தின் பிரசார நிருபங்கள்வெளி வந்து கொண்டிருப்பதைக் காணவும் இதன் உண்மைகளை நெருங்கிப் பார்த்து நுணுகித் தெரியவேண்டுமென ஆசை கொண்டோம்.

இச்சங்கத்தின் பிரசாரத் தொண்டர்களும், தலைவர், காரியதரிசிகளும் பிரசாரத்தின் பேரால் செல்லுமிடங்களிலெல்லாம், தாலூகா ஜில்லா போர்டுகளின் அங்கத்தினர் ஸ்தானங்களுக்கு தங்கள் சங்கத்தின் சார்பில் அபேட்சகர்களை நிறுத்தி, அவர்களிடம் சில உறுதி மொழிகளடங்கிய பத்திரத்தில் கையெழுத்து வாங்கி வருவதாயும் அறிகிறோம். இந்த உறுதி மொழி நமுனாவில் கையெழுத்துப் போடுவோர்களுக்கு இச்சங்கத்தார் ஓட்டுச் சேகரித்துத் தருவதில் தீவிர உழைப்பை மேற்கொள்ளுவர் என்றும் சொல்லப்படுகிறது. உறுதி மொழிப் பத்திரம் பரந்த நோக்கத்துடனும், நாட்டிற்கவசியமான திட்டங்களுடனும் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பதில் ஆட்சேபனை இல்லை. கட்டாய ஆரம்பக் கல்வி "தீண்டாப்பேர்களின்" பொது நல உரிமைகளுக்கு ஆதரிப்பும், கல்வியும் குடிதண்ணீர் வசதியும், மதுவிலக்கு, சுதேசியம், கிராமப் பஞ்சாயத்து, செலவில் சிக்கனம், கண்டிராக்டுகளில் நிர்ணயம் முதலியவைகளுக்கு ஆதரவு கோரப்பட்டிருக்கின்றன. வால்தவத்திலேயே இவைகள் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் தான்.

அபிப்பிராயங் கூறுவதில் நிதானமும், ஆதரிப்பதில் தீர்க்காலோசனையும் கொண்டு எழுதும் சுபாவமுடைய "சுதேசமித்திரன்" பத்திரிகை கூட இந்த சமூக முன்னேற்றச் சங்கத்தின் உறுதி மொழி நமுனாவைக் கண்ட மாத்திரத்தில் உப தலையங்கமொன்று எழுதி, இச்சங்கத்தை வரவேற்று உச்சி முதல் உள்ளங்கால் வரையில் அப்படியப்படியே ஆதரிக்கத் துணிந்து விட்டது. இதை கண்டதும் நமக்கேற்பட்ட பிரேமை இன்னுங் கொஞ்சம் அதிகரித்தது. இச்சங்கத்திற்கு தோழர்கள் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனும், கே. ஜி. சிவசாமி ஐயரும் தலைவர், காரியதரிசிகளாக் விருப்பதால் இவர்கள்மீதுள்ள நம்பிக்கையும், அபிமானமுமே இச்சங்கத்தை ஆதரிக்கும்படி "மித்திரனை" தூண்டி யிருக்கலாமெனக் கருதுகிறோம். நிற்க.

இச்சங்க வேலைகளின் நடவடிக்கை விவரம் பத்திரிகைகளில் பிரமாதமாக எழுதப்பட்டு வருவதால் பொது ஜனங்கள் இதைக் கண்டு பிரமிக்கும்படியான நிலையிலிருந்து வருகிறது. இவற்றைக்கண்டு உண்மை நிலைமையை அறிந்து கொள்ள வேண்டுமென ஆசைப்பட்டு, சுமார் 2 மாதங்களுக்கு முன் தோழர் கே. ஜி. சிவசாமி ஐயரவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினோம். அதில் இந்த சங்கத்தாரின் பிரசார நடிக்கைகள் பத்திரிகைகள் மூலம் வெளிவருகின்றனவே யன்றி, இன்ன தேதியில் இந்த ஊரில் பிரசாரம் செய்யப்படுமென்கிற நிகழ்ச்சிக்குறிப்பே (புரோகிராம்) வெளியாகக் காணோம் என்றும், சங்க பிரசார நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவும், அதோடு கூட்டுறவு கொள்ளவும் அவாவுறுவதால், பிரசாரத்திற்குப் புறப்படுமுன் இடமும்தேதியும்தெரிவித்தால்அங்கு வந்து அதைக் கண்டு களித்துக் கலந்துறவாடத் தோதாக யிருக்குமெனவும் வரைந்திருந்தோம். ஓய்வின்மையாலோ, இடையறாத உழைப்பினாலோ தோழர் சிவசாமி நெடுநாட்கள் வரை நமக்குப் பதில் எழுதவில்லை. சுமார் ஒரு மாத காலத்திற்குப் பின் சுருக்கமாக இரண்டொரு வரிகளுடன் "திருச்சிக்கு வருவேன், அப்போது தெரிவிக்கிறேன்" என்று கடிதம் எழுதினார். பின்னர் நாம் நமது பிரதிநிதியை அனுப்பினோம். இந்த சங்கத்தார் பிரசாரம் செய்த விடங்களில் சுற்றுப் பிரயாணஞ் செய்தும் இரண்டோரிடங்களில் பிரசாரத் தோரணைகளை நேரில் கண்டறிந்தும் தனது பிரயாணத்தை முடித்துக் கொண்டு இவ்வாரம் நமது பிரதிநிதி வந்து சேர்ந்தார்.

அவரது தினசரிக் குறிப்பில் இச்சங்கத்தைப் பற்றியும், இதன் அந்தரங்க நோக்கத்தைக் குறித்தும் பகிரங்க வேலைப்பாடு சம்பந்தமாகவும் எழுதப்பட்டுள்ள விஷயத்தைக் கண்ணுற்றதும் நாமே திடுக்கிட்டுப் போனோம். சங்கம் நிறுவியும் வேலை தொடங்கியும் ஏறக்குறைய 4 மாதங்களாகி விட்டனவென்றாலும், இது பற்றி நமது அபிப்பிராயத்தை இவ்வளவு காலமாக வெளியிடாதிருந்தது ஒரு வகையில் நல்லதென்றே கருதுகிறோம். பத்தி பத்தியாக பத்திரிகைகளில் வெளிவரும் செய்தியனைத்தும், கடுகை மலையாகப் பெருக்கிக்கூறும் வெத்து வேட்டாகவே காணப்படுகிறது. சமூக முன்னேற்றச் சங்கம் என்னுந் தலைப்பின் கீழ் வெளிவரும் பத்திரிகைச் செய்திகளைப் படித்துப் பார்த்தால் அதன் வாசக நடையிலிருந்தே சகலமும் ஒரே தனிமனிதனால் எழுதப்படுகிற கட்டுரை என்பதை உணரலாம். எது எப்படி இருந்தாலும் சமூக முன்னேற்றச் சங்கம் தினசரிப் பத்திரிகைகளின் ஏடுகளை விழுங்கி நன்றாக விளம்பரமாகி விட்டது, ஆனால் பத்திரிகைகளில் வெளிவரும் செய்தியைக் கொண்டு ஏமாந்து போக வேண்டாமென திருச்சி ஜில்லா வாசிகளைத் தட்டி எழுப்புகிறோம்.

தோழர் கே. ஜி. சிவசாமி ஐயர் எந்த விதமான பிரதி பிரயோஜனத்தையுங் கருதாத பிராமணோத்தமராக விருக்கலாம். தலைவராக விருக்கும் டாக்டர் ராஜன் தீண்டாமை விலக்கிலும், குடிபான ஒழிப்பிலும் தீவிர நோக்கமுடைய தேச பக்தராக விருக்கலாம். தொண்டர்களாக முன் வந்துள்ளார் அனைவரும் நிஷ்காமிய கர்ம பிராமண இளைஞர்களாகவுமிருக்கலாம். சமூக முன்னேற்றச சங்கத்தின் நோக்கமும், உறுதி மொழிப் பத்திரமும் முற்போக்கான முறையில் எழுதப்பட்டவைகளாகவுமிருக்கலாம், ஆனால்உள்ளூரப்புகுந்து பார்க்கின்ற அளவில், யாதோ ஒரு குறுகிய நோக்கத்தை முன்னிட்டு சூக்ஷமக் கருத்தோடு அமைத்திருப்பதாகவே நமது பிரதிநிதிக்குப் புலனாகின்றது.

அழகான வெளிப்பூச்சை முன்னிறுத்தி—பரந்த நோக்கங்களை பகிரங்கப் படுத்தி—அதன் மறைவிலிருந்து கொண்டு வகுப்புப் பிரீதியும், ஜாதி அபிமானமும் தலை தூக்கி ஆடுவதாக நமது பிரதிநிதி நம்புகிறார். யாதோ ஒரு ஆழ்ந்த விஷம நோக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு கைப்பற்றச் செய்து, அவற்றின் தலைமை பீடங்களை 1927ம் ஆண்டுக்கு முன்னிருந்த மாதிரி அமைப்பதற்கு பிரயத்தனப்படுவதாக உறுதிப்பாட்டுடன் சொல்லப்படுகிறது.

சமூக முன்னேற்றத்தில் சத்தியமான ஆர்வங் கொண்டு, பெயரளவில் அங்கத்தினர்களாக நாற்காலிகளை அடைத்துக் கொண்டிருப்போர்களையும், சர்வஜன சமரசக் கோட்பாடுகளுக்கு விரோதமா யிருப்போர்களையும் பொது நிதியை அநியாயமாக துர்வினியோகஞ் செய்வோர்களையும் வெருட்டியடிப்பதில் ஆட்சேபணையில்லை. இம்முயற்சியில் நாமும் நம்மாலான சேவை செய்யக் காத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உரலில் உமியைக் கொட்டிக் கொண்டு அவுல் இடிக்கப்போவதாகச் சொல்லும் யோசனைகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. வகுப்புப் பிரச்சினையை மனதில் வைத்துக் கொண்டோ, வேறு ஏதாவது கருத்தை நெஞ்சத்தில் பூட்டிவைத்துக் கொண்டோ செய்யப்படும் காரியங்களை முழு மூச்சாக நாம் கண்டித்தே தீருவோம். இந்த சங்கத்தின் மூலம் நமது ஜில்லாவின் ஏதோ ஒருமகத்தான முனனேற்றத்தை அடையப் போவதாக யாரேனும் சொல்லுவார்களேயானால், கடைசியில் அரண்மனை நெல்லுக்குப் பெருச்சாளியை காவல் வைத்த கதையாகவே முடியப்போகிறதென்பதாக இப்போதே அவர்களுக்கு எச்சரிக்கை செய்யும்படி கூறுகிறார் நமது பிரதிநிதி.

நமது பிரதிநிதியின் தினசரிக் குறிப்பில் காணப்படுகிற விஷயங்கள் உண்மையாக விருக்குமேயானால் பொதுஜன க்ஷேமத்தை முன்னிட்டு இந்த சமூக முன்னேற்றச் சங்கத்துடன் நாம் நேரானயுத்தம் தொடங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டே தீருமென்பதை சங்கடத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். தூங்குகிறவனை எழுப்பினால் தொந்தரவுதான் என்பதை சமுக முன்னேற்றச்சங்கம் உணருமாக. நமது பிரதிநிதியின் தினசரிக்குறிப்பு நீண்டதாக விருப்பதால் அதைச்சுருக்கி எடுத்து விரைவில் பிரசுரிப்பதாக விருக்கிறோம். இனி அடிக்கடி இது விஷயமாகக் கவனிப்பதாகவும் முடிவுசெய்துள்ளோம், பொது ஜனங்கள் சென்னைப்பத்திரிகைகளில் வெளிவரும் செய்தியைக்கண்டு மருள வேண்டாமெனவும் உண்மைகளை விரைவில் காணலாமெனவும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

('நகரதூதன்')

# சுயமரியாதை முழக்கம்.

## ஜமீன் குடும்பத்தில் சீர்திருத்தத்திருமணம்.

### நீதிபதி ராமேசம் நடத்திவைத்தார்.

சென்னைக் கருகாமையிலுள்ள, திருவொற்றியூரில், சன்னதி வீதியில் இன்று காலை ஓர் சீர திருத்த மணம் நடைபெற்றது. சென்னை ஹைக் கோர்ட்டு நீதிபதி திரு. ராமேசம் விஜயம் செய்து மேற்படி திருமணத்தை நடத்தி வைத்தார். சென்னையிலிருந்து பல பிரமுகர்கள் திருமணத்திற்கு விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

திருமணத்தின் விவரம்.

மணமகன்:—தஞ்சை ஜில்லாவிலுள்ள பிரபல ஜமீன்தார்களிலொருவரான சிங்கவனம் ஜமீன்தாரவர்களின் கடைசித்தம்பி எஸ். வி. ஆர். ஏ. சாமிநாதமைக்கண் கோபாலன் (இளைய ஜமீன்தார், சிங்கவனம்) என்பவராகும். இவருக்கு வயது 21: வாண்டையார் வகுப்பைச் சேர்ந்தவர்.

மணமகள்:—காலஞ்சென்ற தஞ்சாவூர் சீனியர் இளவரசரின் வைப்பாட்டிமகளென்று கூறப்படும் திருமதி. தமயந்தி, தஞ்சை தாசி கஜலாபாயின் பேத்தியாவள். பரம்பரைத் தாசிவகுப்பைச் சேர்ந்தவர். வயது பதினாறு.

முதற் காதல்.

தஞ்சை நகரத்தில் வசித்துவந்த மேற்குறிப்பிட்ட இவ்விருவருக்குள்ளும் காதலேற்பட்டு, அக்காதல் முறையற்றதென்று சிலரால் ஆட்சேபிக்கப்பட்டு, தஞ்சை ஜில்லா டிவிஷனல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் சில வழக்குகளும் நடைபெற்றன. பின்னர் இவை சம்பந்தமாய் சென்னை ஹைக்கோர்ட்டில் நீதிபதி, சர். வி. ராமேசம் முன்பாகவும் ஓர் மனுக்கொடுக்கப்பட்டது. இம்மனுவை விசாரணை செய்த நீதிபதிராமேசமவர்கள், சாமிநாதன் தமயந்தி இவர்களிருவருடைய வாக்கு மூலங்களைக் கேட்ட பின்னர் இருவருக்குள்ளும் பரஸ்பர காதல் மூண்டுகொண்டிருப்பதை உணர்ந்து ஒருவருக்கொருவர் மணஞ் செய்துகொள்ள விரும்புவாரா என்று அறிந்து அங்ஙனம் மணஞ் செய்து கொள்ளும்பட்சத்தில் தாமேயிருந்து அம்மணத்தை நடத்திவைப்பதாகக் கூறினர்.

விவாக விளக்கம்

அதன்மேலேயே விவாகம் நிச்சயிக்கப் பெற்றது. இரு தரப்பினரும் சீர்திருத்த வேட்கையால் தூண்டப்பெற்று ஏனைய விஷயங்களில் எத்துணை வித்தியாசங்களிருந்தபோதிலும் இருவரும் மணஞ்செய்துக்கொள்ளும் விஷயத்தில் அனைவரும் ஏகமனதாய் சம்மதிக்க, அதன் பலனாகவே இத்திருமணம் 19-7-32ல் நடைபெற்றது. அன்று மாலை 5-மணிக்குச் சென்னை எழும்பூர் கமாண்டரின் சீப் ரோட்டிலிருக்கும் "வில்லிங்டன்" என்னும் பங்களாவில் ஷை மணமக்களைவரவேற்குமுகத்தான்தேனீர் விருந்தொன்று நடைபெற்றது. அது பொழுது மணமக்களும் விருந்தினருமாகக் கூடி புகைப்படமொன்றும் எடுத்தனர். அவ்விருந்திற்கு வந்திருந்தவர்களில் கீழ்க் கண்டவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்:—

நீதிபதி, சர், ராமேசமவர்கள், பாரிஸ்டர், வி. எல். எதிராஜ் அவர்கள், அட்வகேட் திரு. என். சோமசுந்திரம் பிள்ளை, அட்வகேட். திரு. கே. எஸ். தேசிகன், "திராவிடன்" ஆசிரியர், திரு. டி. வி. சுப்ரமணியம், மிஸஸ் ஜீனராஜதாஸா, மிஸஸ் அம்முசாமிநாதன், மிஸஸ் லக்ஷ்மி சாமிநாதன், மிஸ் பிராக்வே, மிஸ் ஜெராட். திரு நாராயணசாமி முதலியார் அட்வகேட், கே. ஆர். சுந்தரலிங்கம், அட்வகேட் ரங்கனாத சாஸ்திரி, திரு கோவிந்தன், டாக்டர். ஜானகிராமன், அட்வகேட், வி. கே. தாமோதரராவ் திரு எஸ். வி. ஆர். ஏ. ராமரத்தினம் திரு. ராஜகோபால் பிள்ளை, பண்டிட் திருஞான சம்பந்தம் முதலியவர்கள் வந்திருந்தனர்.

தேக்கச்சேரி முடிந்ததும் விருந்தினர்கள் ஒருவருக் கொருவர் மணமக்களுக்கு அறிமுகஞ் செய்துவைக்கப்பட்டனர். பின்னர் 6-30 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

---

## அடியக்கமங்கலம் றபிகுல் இஸ்லாம் சொசைட்டி.

இச்சொசைட்டியின் ஆதரவில் திரு நபி முஹம்மது (ஸல்) அவர்களது பிறந்த தினத்தைக் கொண்டாடுவான் வேண்டி சென்ற 16-17-7-32 இருதினங்களின் மாலையில் திரு நபி புகழ்பாக்கள் "பைத்து ஊர்வலம் புறப்பட்டு சிறப்பித்தபின் 17-7-32ல் காரைக்கால் முஸ்லீம் வித்தியாபிவிருத்திகலாசாலை அரபிபோதகாசிரியர் ஆலிஜனுப், மௌல்வி, ஏ. எஸ். ஐ. அப்துல்ஸமத்சாஹிப் அவர்களது அக்ராசனத்தில் ஜனுப்கள் ஹெட்மாஸ்டர் அப்துல் ஹக்சாயபு, எஸ். புருஹானுத்தீன் - மௌலவி, அஹமதுசாஹிப்; ம. மூ. சுல்தான்; செ. அ. அப்துல்ரஜாக் ஆகியவர்களால் பிரசங்கங்கள் செய்யப்பட்டபின் சங்க 13 வதாண்டு அறிக்கையும்" மஹமது நபியும் அயல்மத வாதிகளும் என்னும் புத்தகம் வினியோகஞ் செய்யப்பட்டபின் கூட்டம் இனிது கலைந்தது. (ஒரு நிருபர்)

---

## தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் துறையூர்.

நமது சங்கத்தின் நிர்வாகக்கூட்டம் 19-7-32 மாலை 6 மணிக்கு தோழர் ரெங்கசாமி. அவர்கள் தலைமையில் கூடப்பட்டு அடியிற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆகஸ்ட் மாதம் 6 7 தேதிகளில் துறையூரில் நடைபெறப் போகும் தமிழர் மகாநாட்டோடு புலவர் மகாநாடு மாணவர் மகாநாடு என மூன்று மகாநாடுகள் நடைபெறப்போவதால் தற்காலம் தமிழர் முன்னேற்றத்திற்காக தமிழர் மகாநாடுமட்டும் நடந்தால் போதுமென்று இச்சங்கம் கருதுவதோடு புலவர் மகாநாடு நடத்துவது உசிதம் அல்லவென்று இச்சங்கம் கருதுவதாலும் ஷை மகாநாட்டின் விளம்பரம் 1-7-32, 9 வது அறிக்கைப்படி ஷை அறிக்கையின் கொள்கைக்கு முறன்பாடாக புலவர் மகாநாடு நடப்பது அநாவசிய மென்று இச்சங்கம் கருது வதாலும், புலவரல்லாதார் புலவர்களை சீர்திருத்தும் காலமாக தற்காலம் வந்து விட்டதாலும் புலவர்கள் வேண்டுமானால் தமிழர் மகாநாட்டிலேயே கலந்து கொள்ளலாமென்றும். இச்சங்கம் கருதுவதாலும், புலவர் மகாநாடு நடந்து தான் ஆகவேண்டுமானால் அதைச்சங்கம் அழுத்தமாக கண்டிக்கிறதென்றும் மாணவர் மகாநாடு என்ற பெயரோடு மாணவர் மகாநாடு நடைபெறுமானால் தமிழ்மொழிவளர்ச்சியைக்கருதும் மாணவரல்லாத இளைஞர்களுக்கு மாணவர் மகாநாட்டுடன் கலந்து கொள்வதற்கு இடமில்லை என்று கருதுவதாலும் மாணவர் மகாநாடு என்றபெயரை தமிழ் இளைஞர் மகாநாடென்ற பெயரோடு நடத்த வேண்டுமென்று இச்சங்கம் மகாநாட்டின் நிர்வாகிகளை கேட்டுக் கொள்வதோடு மேற்கண்ட காரணங்களை எல்லாம் உத்தேசித்து தமிழர் மகாநாட்டின் நிர்வாகிகள் துறையூர் தென்னிந்திய நலவுரிமைச் சங்கஒத்துழைப்பை நாடு மாறுகேட்டுக்கொள்ளுகிறது. என காரியதரிசி ஷை மன் ராமசாமி அறிவிக்கிறார்.

---

## தமிழனின் தாமதம்.

கோலார் தங்கவயலிலிருந்து வெளியாகும் சுயமரியாதை வாரபத்திரிக்கையாகிய "தமிழன்" சமீபத்தில் தங்கவயலிலேற்பட்ட குழப்பத்தின் காரணமாய் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. விரைவில் வெளிவருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

---

## வட ஆற்காடு ஜில்லா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

இம்மகாநாட்டை ஆகஸ்ட் மாத கடைசிலாவது செப்டம்பர் முதல் வாரத்திலாவது திருப்பத்தூரில் நடத்த நிச்சயிக்கப்பட்டது. மகாநாட்டு வேலைகள் மும்முரமாக நடைப்பெற்றுவருகிறது. நன்கொடைக்காக இச்ஜில்லா சுயமரியாதை தோழர்களை சந்திக்க அடுத்தவாரத்தில், மகாநாட்டு காரியதரிசிகள் ஜில்லாசுற்று பிரயாணம் செய்வார்கள். மேல்நாடு சென்றிருக்கும் இயக்கத்தலைவர்கள் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களும் எஸ். ராமநாதன் அவர்களும் விஜயம் செய்வார்கள்யென்று நம்பப்படுகிறது. என மகாநாட்டு காரியதரிசிகள் ஜி. சாமி அவர்கள் பி, ஏ. பி. எல். வக்கீழ் திருப்பத்தூர். எம். நடேசன் மண்டி திருப்பத்தூர். வி. பார்த்தசாரதி. ஜோலார்பேட்டை விளம்பர அதிகாரி ஆகியவர்கள் அறிவிக்கிறார்.

---

## லால்குடி தாலுக்கா 4 வது சுயமரியாதைமகாநாடு.

24-7-32-ல் நடக்க ஏற்பாடாகி இருந்த லால்குடி 4 வது சுயமரியாதை மகாநாடு சில அசந்தர்பத்தை முன்னிட்டும், தலைவர்களுடைய அசௌகரித்தை உத்தேசித்தும் நாளது ஆகஸ்டு மீ மூன்றுவது வாரத்தில் நடத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. என்று காரியதரிசி அறுவிக்கிறார்.

---

## பெண் தேவை.

சுமார் 30 வயதிற்குட்பட்டவரும், இதுவரை விவாகமில்லாதவரும், ஒரு பத்திரிக்கை ஆபீசில் கௌரதையான உத்தியோகம் வகிப்பவரும், போதிய வருமானமுள்ளவருமான எனது சகோதரருக்கு ஒரு பெண் தேவை. பெண் எந்தச் ஜாதியையேனும், மதத்தையேனும் சார்ந்ததாய் இருக்கலாம். விதவையாயினும் பாதகமில்லை. நல்ல தமிழ் படிப்பு இருக்கவேண்டும். கொஞ்சம் ஆங்கிலம் தெரிந்திருந்தால் மிகவும் சிலாக்கியமே. விவாகம் சீர்திருத்த சிக்கன முறையில் நடத்தப் பெறும். கடிதங்கள் ரகசியமாய் வைக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மீனாட்சி.
c/o குடி யரசு
ஈரோடு.

குடி அரசு.

ஈரோடு 1932 ஜுலை மீ 24-உ

# வைதீகக் கோட்டையில் சுயமரியாதைக் குண்டு.

—:0:—

செட்டி நாட்டின் தலைநகரான காரைக்குடியில் சென்ற 17-7-32-ல் இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு மிக்க விமரிசையாக நடைபெற்றது. அம்மகாநாட்டின் தலைவர் பிரசங்கம், சென்ற வாரத்திய நமது பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றது. வரவேற்புத்தலைவர் பிரசங்கமும், மற்ற நிகழ்ச்சிகளும் இவ்விதழில் வேறோரிடத்தில் வெளிவந்திருப்பதைக்காணலாம்.

செட்டிநாட்டில் நடைபெற்ற இம்மகாநாடு நமது இயக்கத்தின் வெற்றிற்கு ஒரு சிறந்த சின்னமாகும் என்று கூறியும், நினைத்தும் சந்தோஷப்படுவது சிறிதும் தவறாகாது. ஏனெனில், இன்று நமது நாட்டில் பார்ப்பனீயத்திற்கு ஆதரவளித்து வருகின்ற மக்கள் நிறைந்த இடம் செட்டிநாடு என்பது உலக மறிந்த விஷயம்.

"வேதங்கள்" என்று சொல்லப்படுகின்றவைகளிலும், இயற்கை நிகழ்ச்சிகளுக்குப் பொருந்தாததும், வருணாச்சிரம தருமத்திற்கு ஆதரவளிக்கக்கூடியவைகளுமான புராணங்களிலும் நம்பிக்கை வைத்துக்கொண்டும், அவைகளைப்பற்றி பிதற்றுகின்றவர்களின் வலையிற் சிக்கி ஏமாந்துகொண்டும் இருக்கின்ற மக்கள் செட்டி நாட்டில் தான் அதிகமாக இருக்கிறார்கள். பழமை என்பதில் கண்மூடித்தனமான நம்பிக்கை வைத்துக்கொண்டு, அவை தீமையை உண்டாக்கக்கூடியவைகளாயிருந்தாலும் விடாமல் குரங்குப்பிடியாகப் பிடித்துக்கொண்டு கஷ்டப்படுகின்ற மக்களும் செட்டி நாட்டு மக்களேயாவார்கள். பார்ப்பனர்கள் சோம்பேரிகளாக உட்கார்ந்து கொண்டு தின்று கொழுப்பதற்காக அன்னசத்திரங்களைக் கட்டி வைக்கின்றவர்களும், பார்ப்பனப்பிள்ளைகளைத்தேடிப் பிடித்துக்கொண்டு போய் சோறு போட்டு, எண்ணெய் துணிமணி முதலிய சகல சௌகரியங்களும் கொடுத்து வளர்த்து ஆட்டு மந்தைகளைப் போல கத்திக்கொண்டிருக்கச்செய்கின்ற வேதபாடசாலைகளை அமைத்திருக்கின்றவர்களும், நன்றாயிருக்கின்ற கோயில்களை யெல்லாம் இடித்துத் தள்ளி கோடிக்கணக்கான பணங்களைச் செலவிட்டு மீண்டும் அவற்றைக்கட்டி, பிறகு அவைகளுக்குக் "கும்பாபிஷேகம்" என்னும் பெயரால் லட்சக்கணக்கான பொருள்களையும் செல்வு செய்து பணத்தை வீணாக்கும் "பேரறிஞர்"களும் செட்டி நாட்டில் தான் மிகுதியாக இருக்கிறார்கள். உலகமெங்கும் நாகரீக வெள்ளம் புரண்டு, பழய மூடப்பழக்க வழக்கங்களை யெல்லாம் அழித்துக்கொண்டு வருகின்ற இக்காலத்திலும் செட்டிநாட்டிலுள்ள முதியோர்கள் அனைவரும், பார்ப்பனர்களைச் "சாமி" என்று அழைத்துக்கொண்டும், அவர்களையே "பூவுலக தெய்வங்கள்" என நம்பிக்கொண்டும், அவர்களையே தங்கள் குடும்பத்தின் சகல வரவு செலவுகளையும் நடத்தும் "சர்வாதிகாரி"களாக வைத்துக்கொண்டும் இருக்கிறார்கள் என்பது அந்நாட்டில் அனுபவமுள்ளவர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயம். ஆனால் அந்நாட்டு இளைஞர்கள் தற்பொழுது சுயமரியாதை உணர்ச்சியுடையவர்களாகி அங்கு குடிகொண்டிருக்கும், பார்ப்பனீயத்தை ஒழிக்கவும், தங்கள் சமூக ஊழல்களைப் போக்கிச் சீர்திருத்தஞ்செய்யவும் சில காலமாக வேலை செய்து வருகின்றனர். இத்தகைய உணர்ச்சி வாலிபர்களிடம் உண்டான பிறகுதான் அங்கு நமது இயக்கம் அதிதீவிரமாகப் பரவ ஆரம்பித்தது என்று கூறலாம்.

அங்கு நமது இயக்கம் பரவ ஆரம்பித்த காலத்தில், அந்நாட்டில் குடி கொண்டிருக்கும் "பழம் பெருச்சாளிகள்" நமது இயக்கத்தை அழிப்பதற்குச் செய்த சூழ்ச்சிகளும், இழி செயல்களும் எண்ணற்றவை. பார்ப்பன அதிகாரிகளும், பார்ப்பனர் பேச்சுக்கு "ஆமாம் சாமி" போடும் பணக்காரர்களும் நமது இயக்கத்தைப் பிரசாரம் பண்ணியவர்களுக்கெல்லாம் எவ்வளவோ கெடுதிகளை வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் செய்து பார்த்தார்கள். ஒன்றினாலும், நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கெடுதியோ, நமது இயக்கத்தைப் பரவவொட்டாமல் தடுக்கவோ முடியவில்லை.

சென்ற ஆண்டில் நமது மகாநாடு பல எதிர்ப்புக்களுக்கிடையே, திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள், பி. ஏ. பி. எல்., எம். எல். ஏ., தலைமையிலும், இவ்வாண்டு, புதுச்சேரி அரசாங்க வரவு செலவு இலாக்காத் தலைவர் ஏ.வி. முத்தையா அவர்கள் பி. ஏ. பி. எல். தலைமையில் வெற்றியோடும் நடைபெற்றிருக்கின்றன. சென்ற ஆண்டு மகாநாட்டைப் போலவே (சற்று அதிகமாகவே, இந்த ஆண்டிலும், அதிகாரிகளும், பார்ப்பனர் வசப்பட்ட பணக்காரர்களும், காங்கிரஸ் பேரால் செட்டி நாட்டில் ஜீவனஞ் செய்து கொண்டிருக்கும் அன்னக்காவடிகளும் மகாநாட்டைத் தடை செய்ய பல சூழ்ச்சிகளைப் புரிந்தார்கள். சென்ற ஆண்டிலாயினும், நமது, மகாநாட்டிற்குப் பலபணக்காரர்களின் ஆதரவு இருந்ததாகக் கருதப்பட்டது. இந்த ஆண்டில் பெரிய பணக்காரர்கள் என்று சொல்லக்கூடிய எவருடைய ஆதரவும் இல்லை என்றே கூறலாம். ஆனால் எதிர்ப்பு மாத்திரம் ஒரு சிறிதும் குறைந்தபாடில்லை. அப்படி இருந்தும் நமது மகாநாடு வெற்றியோடு நிறைவேறியதற்குக் காரணம், அந்நாட்டு இளைஞர்களின் ஊக்கமும், தைரியமும், உழைப்பும், சுயமரியாதையும் ஆகும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இம்மகாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் திரு. ஏ. வி. முத்தையா அவர்கள் என்பதையும் வரவேற்புத்தலைவராயிருந்தவர், திரு. எஸ். லக்ஷ்மிரதன் எம். ஏ.பி. எல். அவர்கள் என்பதையும் அறிந்தவரும், மகாநாட்டைப்பொறுப்பற்றவர்களின் கூட்டம் என்றோ, படிக்காதவர்களின் கூட்டம் என்றோ, ஒன்றுந் தெரியாத இளைஞர்களின் கூட்டம் என்றோ சொல்ல முன்வரமாட்டார்கள். அப்படியும், பொறாமையால், வழக்கம்போல், மேற்கண்ட பல்லவிகளைப்பாட முன்வருவார்களானால் அவர்களைப்போல வடிகட்டின முட்டாள்கள் வேறு யாரும் இருக்க முடியாது என்பதைச் சிறு பிள்ளைகளும் அறிவார்கள். இவ்விஷயத்தை வரவேற்புத்தலைவர் திரு. எஸ். லக்ஷ்மிரதன் அவர்கள்,

"வயதாலும், கல்வி அறிவாலும், உலக அனுபவத்தாலும்முதிர்ந்த இத்தகைய பெரியார் ஒருவர் நமது இயக்கக் கொள்கைகள் அனைத்தையும் அங்கீகரித்து ஆதரிப்பதுடன் அவற்றை நிலைபெறச் செய்வதிலும் இத்தனை ஆர்வத்துடன் கலந்து கொள்ளுதல், இவ்வியக்க விரோதிகளின் வம்புப்பேச்சுகளுக்கு ஒரு வாய்ப்பூட்டாக இருக்கும் என்பது திண்ணம்"

என்று தமது வரவேற்புப்பிரசங்கத்தில் கூறியிருப்பதைக்கொண்டு உணரலாம்.

வரவேற்புத்தலைவர் அவர்கள்பிரசங்கத்தில், நமது இயக்கத்தின் உண்மையான கொள்கைகள், இவைகள் என்பதையும், எதிரிகள் நம்மை "நாஸ்திகர்கள்" என்றும், "பிராமணத்துவேஷிகள்" என்றும், "வகுப்புவாதிகள்" என்றும், "தேசத்துரோகிகள்" என்றும் பிரசாரஞ் செய்வதெல்லாம் கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் என்பதை தெள்ளத்தெளிய விளக்கிக்காட்டியிருக்கும் பகுதிகள் மிகவும் கவனிக்கத்தக்கவையாகும். அவைகளாவன:—

"பசுவிற்காகவும், உருக்கிவிட்ட ஈயத்தைப் போல் காதுகளைத் துளைக்கின்ற கொட்டுகளுக்காகவும், தென்கலை வடகலை நாமங்களுக்காகவும், இன்னும் இத்தகைய இழிந்த காரியங்களுக்காகவும் நம்மைப்பல வகுப்பினராகப்பிரித்து, தமது உடல் பொருள் ஆவி யாவற்றையும் ஒருங்கே இழந்து உலகத்தை எப்பொழுதும் போர்க்களமாக்குவதற்குக் காரணமாயிருக்கும் மதங்களை விட்டொழியுங்கள் என்றால் நாம் உடனே நாஸ்திகர் எனப்பட்டம் சூட்டப்படுகின்றோம்.

"அறிவை ஒதுக்கிப் பிறப்பைப்பேணி அநீதிகளைப் போதிக்கும் சாத்திரக்குப்பைகளைக் கண்டிப்பதனாலும்; வருணாச்சிரம உயர்ச்சி தாழ்ச்சிகளையும், அநியாய உரிமைகளையும், கடமைகளையும் தள்ளிவிடுவதனாலும்; நம்மை பிராமணத்துவேஷிகளாகத் தூற்றுகிறார்கள்

"உய்வடைவதற்காக சந்தர்ப்பம் ஏற்படும்வரையிலும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களும் பிரத்தியேகமான வசதிகள் அமைக்கவேண்டுமென்றால் நம்மைத் தேசிய விரோதமான வகுப்புவாதச் சச்சரவுகள் செய்பவர்களாகப் பறையறைகின்றனர்

"அன்னிய அரசாட்சியை ஒழிப்பது மட்டும் சுயராஜ்யமாகக் கருதி, மக்கள் கட்டுண்டு அடிமைகளாய் வாழ்வதற்குக் காரணமாயிருக்கும் பழக்க வழக்கங்களாகிய இருப்புத்தளைகளை, மதநடுநிலை என்ற பெயரால் இருந்தபடியே என்றும் நின்று நிலவச்செய்யும்

காங்கிரசுத் திட்டத்தையும், இன்னும் இன்னோரன்ன அவர் தம் துறைகளையும் நாம் எடுத்துக் கூறுவதனால் நம்மைச் சுதந்தரம் வேண்டாத தேசத் துரோகிகள் என்று முரசறைகிறார்கள்".

மேற்கூறிய உண்மைகளை அறிந்த எவரும் சுயமரியாதை இயக்கத்தைப் பழிகூற முன்வருவார்களா என்று கேட்கிறோம்.

எந்த இடங்களில் அடிமைத் தன்மை, ஏமாற்றுந் தன்மை, வஞ்சகம், கொடுமை, புரட்டு, மூடநம்பிக்கை, சுயநலம் முதலியவைகள் குடிகொண்டு இருக்கின்றனவோ அங்கெல்லாம் நமது இயக்கம் தோன்றாமலும், தனது சுயதர்ம வேலையைச் செய்யாமலும் போகாது, என்ற உண்மையை நாம் அடிக்கடி கூறிவருகிறோம். மேற்கூறிய பார்ப்பனீயத்தால் கட்டுப்பட்டு வருந்தும் மக்களுக்குச் சமத்துவமும், சுதந்தரமும், விடுதலையும் அளிக்கவே நமது இயக்கம் தோன்றியதாகும். இதனை மகாநாட்டுத்தலைவர் திரு. ஏ. வி. முத்தையா பி. ஏ. பி. எல். அவர்கள் தமது தலைமைப்பிரசங்கத்தில் விளக்கிக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அப்பகுதி வருமாறு:—

"ஏழை மக்கள்,-வறிய மக்கள் அறியாமையிலழுந்தி, உண்மை விளங்காது பலபல துறைகளிலும் இன்னல்களுக்குட்பட்டுத் தவிக்கின்றார்கள்; இது ஒரு காட்சி! இப்படித் தவிக்கும் ஏழை மக்களுக்கு—வறிய சகோதரர்களுக்கு கண்களைத் திறந்து விடாமல்—புத்தியைத் துலக்காமல்—வழிகாட்டாமல் வேறு சில சகோதரர்கள், அவர்களை மிரட்டி—அதட்டி—பயப்படுத்தி — ஏய்த்துப் பொருள் பறிக்கின்றார்கள். இது மற்றொரு காட்சி.

இவ்விரண்டு காட்சிகளையும் கண்டு மனம் பொறாது—உள்ளம் உடைந்து இவைகளையகற்ற—வழிதேட — இச்சீர்கேடான நிலையைச் சீர்படுத்த அருள் நோக்கங் கொண்ட—அறிவிற் சிறந்த பெரியார்கள் இவ்வியக்கத்தை ஆரம்பித்திருக்க வேண்டும்; ஆரம்பித்தார்கள்.

அன்பு—அறிவுடைய எவரும் இந்தக்காட்சிகளைக் கண்டால்—இந்த நிலையைப்பார்த்தால்—இதைப்பற்றிக் கேள்விப்பட்டால் சும்மா இரார்; எப்படி இருக்க முடியும்?

மனம் பதைத்து "அந்தோ! அறியாமையின் விபரீதங்கள் எவ்வளவு கொடியன! இப்படிப்பட்ட அநியாயங்களும், அழும்புகளும் உண்டா? இவைகளை அகற்றுவதற்கு வழியொன்றும் கிடையாதோ என ஆழ்ந்து யோசிக்காமலிரார்.

இந்த யோசனை உதித்த ஒருவருக்கு ஆற்றலுமிருந்தால் இயக்கம் ஒன்றில் முற்பட்டுத் தொண்டு செய்யாமலிரார்.

தன்னைப்போன்ற உயிர்கள் இன்னலுற்று, வாடி, வதங்கி, ஏங்கி நிற்கும்போது, கல்நெஞ்சம் படைத்தவனாய், சாத்திரங்கள் காட்டி, உதவி செய்ய முன்வராமல், வாதம் புரிபவனும் மனிதனுமோ? சொல்லுங்கள்"

மேற்கூறிய தலைவர் பேச்சில் உள்ள உண்மையைச் சிந்திக்கும் எவரும் ஏழை மக்களுக்குத் தொண்டு செய்ய முன்வராமலிருக்க முடியுமா? அவ்வாறு ஏழைகளுக்காக—கஷ்டப்படும் மக்களுக்காக—அடிமையாகிக் கிடக்கும் மக்களுக்காக உண்மையாக உழைக்க விரும்புகின்றவனுக்காகவே சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டது என்பதை மேற்கூறிய உண்மை உரைகளைக்கொண்டு தெளிவாக உணரலாம்.

கடைசியாக வரவேற்புத் தலைவர்கள்,

"விருதுநகர் மகாநாட்டுத் தீர்மானத்திற்கு இணங்க நமது இயக்கத்திற்குச் சங்கம் அமைக்கவேண்டும். அதன் சட்டதிட்டங்களும், கொள்கைகளும், நமது இயக்க நோக்கங்களுக்கு இணங்க அவசியம் நேரிடும் பொழுது மாற்றியமைத்துக் கொள்ளக்கூடியனவாக இருத்தல் வேண்டும். அதற்குப் பெருநிதி திரட்டல் வேண்டும். வளம் நிறைந்த ஓரிடத்தில் சுயமரியாதைப்பல்கலைக்கழகமும், தலைச்சங்கமும் நிறுவவேண்டும். மேனாட்டுக் கிறிஸ்தவ மிஷன்களைப்போல பொருளீட்டுவதும், மக்கள் முன்னேற்றமே கருதி உழைக்க முன்வரும் ஆசிரியர்களையும், தோழர்களையும், இளைஞர்களையும் ஒன்று சேர்க்கவும்வேண்டும். நமது கொள்கைகளுக்கேற்ற வாழ்க்கை முறையும் சகல விதமான கலைகளும், கைத்தொழில்களும், விவசாய அபிவிருத்தி முறைகளும் அவ்விடத்தில் போதிக்கப்பட வேண்டும். அக்கழகம், நாட்டில் நாம் என்ன மாறுதல்களை விரும்புகிறோமோ அவற்றின் உண்மையையும், மேன்மையையும் வாழ்க்கையில் அனுஷ்டிப்பது மூலமாக விளக்கிக்காட்டுவதாக இருக்கவேண்டும்"

என்று கூறியிருக்கும் விஷயம் எல்லோருடைய கவனத்தையும் தற்சமயத்தில் கவர்ந்து நிற்கும் ஒரு விஷயமாகும். இது சம்பந்தமாகப் பலமுறை பேசப்பட்டும், தீர்மானங்கள் செய்யப்பட்டும் வருகின்றனவே யொழிய இன்னும் ஒரு காரியமும் செய்யப்படவில்லை. ஆனால் இதனால் நமது வேலைகள் ஒன்றும் தடைப்பட்டுவிடவில்லை யென்பது மாத்திரம் நிச்சயம். நமக்கென்று ஒரு சரியான ஸ்தாபனத்தை ஏற்படுத்திக்கொள்ளாமலே தனிப்பட்ட சிலருடைய உழைப்பினாலும் செல்வாக்கினாலும் நமது இயக்கம் நடைபெறுகிறது என்று பிறர் சொல்லக்கூடிய நிலைமையிலிருந்தாலும், நமது நாட்டில் சங்கங்களும், சட்ட திட்டங்களும் உள்ள இயக்கங்கள் நீண்டகாலமாகக்கிளர்ச்சி செய்து ஏழைகளுக்குச்செய்திருக்கும் நன்மையைக்காட்டிலும், நமது இயக்கம் எவ்வளவோ மாறுதலையும், உணர்ச்சியையும் குறுகிய காலமாகிய இந்த 7 ஆண்டுகளுக்குள் தேசத்தில் உண்டாக்கியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆயினும் நமக்கென ஒரு ஸ்தாபனம் வேண்டியது அவசியம் என்பதையும் யாரும் மறுக்க முடியாது. ஆகவே இவ்விஷயம் வெளிநாட்டிலிருக்கும் நமது தலைவர்கள் வந்தவுடன் செய்யப்படும் என்று உறுதியாக நம்பலாம்.

இம்மகாநாட்டில் முக்கியமாகச் செய்யப்பட்டிருக்கும் தீர்மானம் ஒன்றேயாகும். அது:—

"தற்பொழுது ஜில்லா அதிகாரிகளான, ஜில்லா கலெக்டர், ஜில்லா நீதிபதி, ஜில்லா வைத்திய அதிகாரி, தேவகோட்டை சப் கலெக்டர் முதலியவர்கள் எல்லாம் பார்ப்பனர்களாயிருப்பதனாலும், தேவகோட்டைக்கடுத்த கிராமங்களில் அடிக்கடி ஆதிதிராவிடர்கள் தாக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்படுவதனாலும், இந்த ஜில்லாவிலுள்ள பிராமண அதிகாரிகளை மாற்றி, பிராமணரல்லாத அதிகாரிகளையே நியமிக்க வேண்டுமென்று அரசாங்கத்தை இம்மகாநாடு கேட்டுக்கொளுகிறது"

என்னும் தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்தைக்கொண்டே அப்பக்கங்களில் ஏழை மக்கள் படும் துன்பத்தை அறியலாம். சாதாரணமாகவே, பணக்காரத்தன்மையும், பார்ப்பனீயமும் மிகுந்த உறவுடையது என்பது கண்கூடான விஷயம். பணக்காரர்கள் நிறைந்த நாட்டில் ஏழை மக்கள் சுதந்தரம் வேண்டுமென்று பேச வாயையெடுத்தாலே அவர்கள் பாடு கஷ்டத்தில் முடியும். அதோடு பார்ப்பனீயத்தை மேற்கொண்ட அதிகாரிகளும் நிறைந்திருப்பார்களானால் அந்த நாட்டு மக்களின் நிலைமையை நாம் என்னவென்று சொல்ல முடியும்? ஆகவே இத்தீர்மானம் மிகமிக அவசியமான ஒரு தீர்மானமாகும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய பார்ப்பனீயமும் பணக்காரத் தன்மையும், மூடப்பழக்க வழக்கங்களும் நிறைந்துள்ள நாட்டில் வெற்றியாக நடந்த சுயமரியாதை மகாநாடு குறிப்பிடத்தக்கதொன்றன்றோ? இம்மகாநாட்டை நடத்துவதில் பெரும் முயற்சியெடுத்துக்கொண்ட வாலிபர்களின் ஊக்கத்தையும், உழைப்பையும், தைரியத்தையும் பாராட்டுகின்றோம். அதோடுகூட செட்டிநாட்டைச் சீர்திருத்த இது போல் ஆண்டுக்கொரு மகாநாடு நடத்துவது மட்டும் போதாதென்றும், நாள்தோறும் மகாநாடுகளும் பொதுக்கூட்டங்களும் சங்கிலித் தொடர் போல் நடத்திக்கொண்டேயிருந்தால் தான் அந்நாட்டில் உள்ள பார்ப்பனீயத்தை அடியோடு விரைவில் ஒழிக்க முடியும் என்பதையும் ஞாபகப்படுத்துகின்றோம்.

## காதல், கலப்பு மணம்.

சிங்கவனம் ஜமீந்தார் அவர்களின் இளைய சகோதரரான திரு. சாமிநாதன் அவர்களுக்கும் திருமதி தமயந்திக்கும் நடந்த காதல் கலப்புமணசெய்தியின்முழுவிபரம் பிறிதோரிடம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. கலப்புமணம் பெருக வேண்டும், அதனால் ஜாதிப் பேய் மாண்டொழியும் என்று நாம் பன்முறையும் வற்புறுத்தி வருகிறோம். சமீப காலங்களில் நடைபெற்ற அநேகவிவாகங்களைக்கண்டு நாம் மகிழ்வுற்றோம். வைதீகர்களும், வர்ணாச்சிரமிகளும், எவ்வளவுதான் நம்மை தூற்றியபோதிலும், நமது கொள்கைகளைத் திரித்துக்கூறி நம்மீது துவேஷமுண்டாக்க முயன்றபோதிலும் காலச்சக்கரத்தின் வேகமும், மக்கள் முன்னேறக் கொ

ண்டுள்ள பேரவாவும், இயற்கையாய் எழும் சீர்திருத்த வேட்கையும் நாம் கூறுவதுபோலவே, நம் கொள்கைகளை அநுசரித்தே சம்பவங்கள் நிகழ்வதும், நமது வெற்றியென்றே கூறுவோம். அதிலும் பெரிய குடும்பங்களில் அவை நிகழுமாயின் வெற்றிமேல் வெற்றி யென்றே துணிந்து கூறுவோம். சாமிநாதன் தமயந்தி திருமணவைபவமே அதற்குத்தக்க சான்ருகும். மணமகன் தஞ்சாவூர் ஜில்லாவில் பிரபல ஜமீன் குடும்பங்களிலொன்ருகிய சிங்கவனம் ஜமீன்தாரரின் இளையசகோதரராவர். மணமகள் வேறுஜாதியாயிருந்தும் பெற்ருேர் சம்மதத்தின்மேல் இம்மணம் நடந்ததென்பதறிய அளவிலா மகிழ்ச்சியடைகிருேம்.

பிரபல, பெரிய ஜமீன்குடும்பங்களில் இதுவே முதல் சீர்திருத்த திருமணமெனநம்புகிருேம். இம்மணம்ஒரு பெரும்சீர்திருத்தப்புரட்சியையுண்டாக்கிவிட்டதென்றேசொல்வோம். தவிரவும் இதை நடத்திவைத்த சென்னை நீதிபதி ராமேசம் அவர்களது பரந்த நோக்கத்தையும், சீர்திருத்த அவாவையும், பெரிதும் பாராட்டுகிருேம். படித்துப்பட்டம் பெற்றவர்களும், உயர்தர உத்தியோகஸ்தர்களும், பட்டைநாமத்தையோ, உச்சிக்குடுமியையோ, காதுக்கடுக்கனையோ விடாது கெட்டியாய் இன்னும் பற்றிஇருக்கும்போது சீர்திருத்த உலகில் பெரும் புரட்சியை உண்டாக்கி தக்கதோர் வழிகாட்டியாய் விளங்கும் நீதிபதி ராமேசமவர்களையார்தான் போற்ருது, புகழாது இருக்கமுடியும். இத்தகையோர் முன்வரின் சுயமரியாதை ஜோதி, சீர்திருத்தச்சுடர் காற்றுநுழையாத இடத்திலும் கடிதுநுழைந்து பரவுமென்பதற்கென்னதடை. மிக்கதைரியத்துடன் இம்மணத்தில் ஈடுபட்டதம்பதிகளையும், அதற்கு ஆதரவும் சம்மதமும் கொடுத்த பெற்ருேரையும், இம்மணத்தை நடத்திவைத்த நீதிபதி ராமேசமவர்களையும் முழுமனதுடன் பாராட்டுகிருேம். அன்ஞர்க்கு நம் நன்மகிழ்ச்சியுரியதாகுக.

## தங்கவயல் பொதுக் கூட்டம்.

கோலார் தங்கவயல் மாரிகுப்பம் பௌத்த சங்கசபா மண்டபத்தில் 20-7-32-வ சனிக்கிழமை மாலை 5-ந்து மணிக்குமேல் உயர் திரு ஜி. அப்பாதுரையார் அவைத்தலைமையின் கீழ் சிறந்தபிரசங்கம் நடைபெறும் சகோதரிகள் சகோதரர்கள் வறுமாறு கோறுகிருேம்.

(கௌரவ காரியவமைச்சர்)

## திருச்சி ஓரியண்டல் லைப் அஷ்யூரன்ஸ் ஆபீஸ் நிலை.

மேற்சொல்லிய கம்பெனியின் காரியதரிசியாக இருந்துவரும் அய்யங்கார் ஒருவர் பிராமணரல்லாதாரிடையும், கீழ்தர உத்தியோகஸ்தர்களிடையும் செய்துவரும் தொந்தரவுகளை ஜஸ்டிஸ், திராவிடன் பத்திரிகைகளின் மூலமாக பாலிசிதார்களாகிய நாங்கள் 10, 11, 12. ஏப்ரல் 1932 தெதிகளிலும் 21-4-32 தேதியிலும் முறையே பம்பாய் தலைமைஆபீஸ் அதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்துகொண்டும் நாளது வரையில் யாதொருகவனமும் தலைமை அதிகாரிகள் செலுத்தாதற்கு மிகவும் வருந்துகிருேம். இதனுல் தலைமை ஆபீஸில் அதிகாரிகள் தங்களுடைய உத்தியோகஸ்தர்களின் கௌரவத்தைக் காப்பாற்றவே சகல வழிகளிலும் முயற்சி செய்கிருர்களென்றும், கம்பெனியை நிலைநிறுத்தி வைத்திருக்கிற பாலிசிதாரர்களையும் சிறுஊதியம் பெற்று வேலைசெய்யும் கிளர்க்குகளையும் கம்பெனியார் சிறிதுகூட மதிப்பதில்லை என்பதும் புலனுகிறது. அப்படி இருக்கும் பட்சத்தில் கீழ்வரும் கேள்விகளுக்கு பம்பாயில் வகிக்கும் தலைமை அதிகாரிகள் விடையளிப்பார்களா:—

பாலிசிதார்கள் சேர்ந்து கம்பெனி உண்டாயிற்ரு இல்லாவிடில் காரியதரிசி முதலான சிப்பந்திகள் சேர்ந்து கம்பெனி உண்டாயிற்ரு? பாலிசிதாரர்களின் சௌகரியத்துக்கும், அவர்களின் பொது அபிப்பிராயத்துக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது கம்பெனியின் கடமையா அல்லது சில அதிகாரிகள் சேர்ந்துகொண்டு ஏதேச்சதிகாரம் செய்து கொண்டிருப்பது கம்பெனியின் கடமையா.

ஒரு தனிமனிதனுகிய காரியதரிசி என்று சொல்லப்படுபவர் பாலிசிதார்களிடத்திலும், தன் கீழ்உத்தியோகம் பார்க்கும் உத்தியோகஸ்தர்களிடத்திலும் நடந்து கொள்ளும் தன்மையானது கம்பெனியின் உன்னத நிலைக்குத் கொஞ்சமேனும் பொருந்தியதல்ல. ஆயிரக் கணக்கான பாலிசிதாரர்களின் அபிப்பிராயத்துக்கு மாறுதலாகஅக்கிரமங்களும், அட்டூழியங்களும் செய்துவரும் பார்ப்பன செக்ரிடரியைக்கண்டிக்காமல் தலைமைஆபீஸ் அதிகாரிகள் வாளா இருப்பதுதான் எங்களுக்கு வருத்தத்தை உண்டு பண்ணுகிறது. பொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாக ஒரு தனி வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கே உத்தியோகம் முதலிய சகல உரிமைகள் கொடுத்துதவி பெரும்பான்மை ஜாதியினருக்கு தீங்கு விளைவித்து கம் பொனியாருக்கு பலவிதத்திலும் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் வாய்த்துவரும் அய்யங்கார் பைத்தியம் பிடித்த இந்தஅய்யங்கார் செக்ரிடரி அவர்களை தலைமை ஆபீஸ் அதிகாரிகள் ஆதரித்துக்கொண்டு வருவதின் ரகசியம் எங்களுக்கு விளங்கவில்லை.

தனக்கு வேண்டியவர்களை அறைக்குள் அழைத்துக்கொண்டு போய் வெகுநேரம் பேசிக்கொண்டிருத்தலும், பாலிசிதாரர்கள்பேச வேண்டியிருந்தால் அவர்கள் ஒரு மணி அல்லது இரண்டுமணி நேரம் காக்கவைத்தலும், இம்மாதிரியான அடாத செயல்களை தலைமை ஆபீஸ் அதிகாரிகள் இதை முதலாவது கவனிப்பார்களாஎன்று கேட்கின்ருேம். பிராமணரல்லாத கிளர்க்குகளையும், ஏனையோர்களையும் கடிந்து பேசுவதும், வேலையை விட்டு நீக்கிவிடுவதாக பயமுறுத்துவதும், அவர்களை அதிகம் வேலை வாங்குவதுமாகிய கொடுஞ் செயல்களுக்குத் தலைமை ஆபீஸ் அதிகாரிகள் உடந்தையா என்று நாங்கள் இதன்மூலம் கேட்கின்ருேம். பிராமணரல்லாதாரை ஆபீசில் உத்தியோகத்திலமர்த்த இதுவரை போதுமான பேர் என்சிபார்சு செய்யவில்லை என்று மேல் அதிகாரிகள் கவனித்தார்களா! பொதுவாக எல்லோருக்கும் சம்பள உயர்த்தம் நடக்கும் போது பிராமணரல்லாதாருக்கும், சில பிராமணர்களுக்கும் என் சம்பளம் உயர்த்தப்படவில்லை என்பதற்குத் தலைமை ஆபீஸ் அதிகாரிகள் என்ன பதில் சொல்லக்கூடும். சம்பளம் அதிகமாகக் கொடுக்கப்பட்டவர்கள் எத்தனை மலைகளைப் புரட்டி அதனுள் அகப்பட்ட மனிதர்களையோ, புல் பூண்டுகளையோ இன்ஸ்யூர் செய்து கம்பெனிக்கு லாபத்தைச் சம்பாதித்துக்கொடுத்தார்கள் என்பது தெரியவில்லை. கமபெனியின் வேலைக்காரராகிய ஒரு செக்ரிட்டரி செய்யும் செயல்களுக்கெல்லாம் தலைமை அதிகாரிகள் ‘ஆம்’ சொல்லிக்கொண்டிருந்தால் கம்பெனியின் கௌரவம்தான் என்னே! பல துறைகளிலும் பலவாறு நாங்கள் எங்களுடைய விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொண்டும் அதிகாரிகள் கவனிக்காது இருப்பது பாலிசிதாரர்களுக்கு அவமானத்தை விளைவிப்பதற்கு ஒப்பாகும் என்பதிற் சந்தேகமில்லை.

பிராமணத்திமிரும், பயங்கரமான வார்த்தைகளும் பிராமணரல்லாதாரை புண்படுத்தக்கூடிய கடுஞ் சொற்களும் திருச்சி ஓரியண்டல் ஆபீஸ் கட்டிடத்தில் தாண்டவமாடாமல் காக்கவேண்டியது தலைமை அதிகாரிகளின் முதல்வேலையாக இருக்கிறதென்பதை எடுத்துக்காட்டுகிருேம். கிளர்க்குகளையும் ஏனையோர்களையும் மிரட்டுவதற்கும், அனுவசியமாக வேலையைவிட்டு நீக்கிவிடுவோம் என்று பயமுறுத்துவதற்கும் பிராஞ்சு ஆபீஸ் அதிகாரிக்காவது, அல்லது தலைமை ஆபீஸ் அதிகாரிகளுக்காவது என்ன சட்டம் இருக்கிறதென்பது எங்களுக்குத்தெரியவில்லை. காரணமின்றி உத்தியோகஸ்தர்கள் நீக்கப்பட்டால் கம்மெனியார் அவஸ்தைக்குள்ளாவார்கள் என்பது ஞாபகமிருக்கட்டும்.

நாங்கள் விரும்புவது என்னவெனில் பிராமணர் பிராமணரல்லாதார் என்கிற வேறுபாடு ஒழியவேண்டும். பாலிசிதாரர்களின் குறைகள்நன்கு கவனிக்கப்படவேண்டும். உத்தியோகத்திமிர் அடங்கவேண்டும். இல்லாவிடில் இந்த செக்ரிடெரி அவர்கள் எங்கேயாவது ஒரு நாட்டிற்கு மாற்றப்பட வேண்டும். நல்ல கௌரவம் வாய்ந்த பிராமணரல்லாதாரோ அல்லது ஐரோப்பியரோ இங்கு வரவேண்டும். தலைமை அதிகாரிகள் தங்களுடைட கம்பெனியின் நல்ல பெயர் சீர்குலையாமலிருக்க வேண்டுமானல் மேற்சொல்லியவற்றை தாமதமன்னியில் செய்யவேண்டும்.

கூடிய சீக்கிரம் பாலிசிதாரர்கள் மகாநாடு திருச்சியில் ஒன்று கூட்டப்பெறும். அச்சமயம் தலைவர் முதலானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். விரைவில் பம்பாயில் நடக்கப்போகும் பாலிசிதாரர்கள் கூட்டத்திற்கும் ஒரு டெலிகேட் தேர்ந்தெடுத்து அனுப்பப்படும். அச்சமயம் மறுபடியும் இவ்விவகாரங்கள் வாதிக்கப்படும்.

பாலிசிதாரர்கள்.

---

## பெருந்தலையூர் கிராமம் பஞ்சாயத்துக் கோர்ட்டு

1932 ஸு ஒத்திய வியாஜ்ய நெ. 6.

கோபி தாலூக்கா பெருந்தலையூர் கிராமம் கஸ்பாவிலிருக்கும் வீரப்பன் மகன் பாக்கியநாதன் மேஸ்திரி—வாதி'

கோபிதாலூக்கா பெருந்தலையூர் கிராமம் கஸ்பாவிலிருக்கும் ஞானமுத்து மகன் மாணிக்கம்—பிரதிவாதி.

வாதிக்கு பிரதிவாதி ரூ. 36-0-0 க்கு பிராமசரிநோட்டு எழுதிக் கொடுத்து தொகை பெற்றுக்கொண்டு நாளது பரியந்தம் அசல் வட்டியுள்பட கொடுக்காததினுல் வாதி ஷை கோர்ட்டில்

| | |
|---|---|
| அசல் ரூ. | 36—0—0 |
| வட்டி ரூ. | 8--12—0 |
| | 44—12—0 |

ஆகரூபாய் நாற்பத்து நான்கு ரூபாய் பனிரண்டணுவுக்கு தாவ செய்து வருகிற 1932 ஸு ஜூலை மாதம் 23-ந்தேதி வாய்தா போட்டிருப்பதால் பிரதிவாதி ஷை வாய்தாவில் கோர்ட்டுக்கு ஆஜராகவிட்டால் ஒருதலைப்பட்சமாய் தீர்மானிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பாக்கியநாதன் மேஸ்திரி,

20—7—1932.

# தமிழின் கதி.

## தமிழின் வீழ்ச்சிக்குத் தமிழ் பண்டிதர்களே காரணம்.

### தமிழ் மகாநாட்டார் கவனிக்க.

(தோழர் ஆர். ரெத்தினசபாபதி)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

தமிழின் வளர்ச்சியைப் பற்றியும், தமிழின் அழகைப்பற்றியும் பண்டிதர்கள் பேசுவதில் பின்வாங்கமாட்டார்கள். பக்கம்பக்கமாக எழுதுவதிலும், சலிக்கமாட்டார்கள். ஆனால் உண்மைக்குப்பரிந்து பேசும்குணமோ, எழுதும் குணமோ, அவர்கட்கு சாதாரணமாக இருப்பதில்லை. ஒருவர் தமிழை தெய்வம் என்பார். மற்றொருவர் தமிழ் அன்னையை நாம் எல்லோரும் போற்றவேண்டுவதவசியம் என்பார். அவரவர்கட்கு தோன்றியவாறு சொல்லிக்கொண்டே போவார்கள். 'திகடச்சக்கர செம்முக மைந்துளான்' என்று ஸ்ரீ சுப்பிரமணிய கடவுள் ஸ்ரீ சிவாசாரியாருக்கு அடி எடுத்துக்கொடுத்தாரே தவிர வடமொழியில் எடுத்துக்கொடுத்ததாகத் தெரியவில்லை. சுப்பிரமணியரே ஸ்ரீ கச்சியப்பசிவாசாரியாரின் சொப்பனத்தில் தோன்றி 'அன்பனே நீ கந்த' புராணத்தாறு சங்கிதைகளும் சங்கர சங்கிதையின் முதற் காண்டமாகிய சிவரகசிய காண்டத்திலுள்ள நமது சரித்திரத்தை தமிழிலே பெரும் காப்பியமாகப் பாடக்கடவாய்' என்று ஆஞ்ஞாபித்தாரே தவிர வேறு மொழியில் எழுதும்படி கட்டளையிடவில்லையே. இவ்வளவு தூரம் இதைப்பண்டிதர்கள் பிரசங்கித்தாலும் இ ர்கள் இன்னும் தேங்காய் வாழைப்பழத்துடன் ஒரு நாலணா கூலியையும் தரகன் கையில் கொடுத்தவுடன் அவன் இப்பண்டிதர்கட்கு விளங்காதபாஷையில் முணுமுணுக்கிறான் (சிபார்சு செய்கிறான்) தரகருடைய பாஷை தமிழாக இருக்கும்படி ஏன் இவர்கள் முயற்சி செய்யக்கூடாது? இனி கடவுள்கட்கெல்லாம் பாஷை தமிழாகவே இருக்கவேண்டும் என்று ஓர் தீர்மானம் ஏன் செய்யக்கூடாது? ஓர்பாஷை உண்மையாக முன்னேற்றமடையவேண்டுமானால் அது நமது கடவுளாலும் அரசாங்கத்தாராலும் அங்கீகரிக்கப்பட்டதாய் இருக்கவேண்டும். கடவுளே நம் தமிழ் பாஷையை அங்கீகரிக்காதபோது தமிழ் எவ்வாறு முன்னேறும் என்பதையும் நீங்கள் கவனிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொது விஷயத்தில் இவ்வளவு தூரம் கவலைபற்றிருக்கும் தமிழ் பண்டிதர்கள் தங்கள்வரையாவது தமிழை போற்றுகின்றார்களாவென்றால், அதுவும் இல்லை. மாறாக தமிழை அவமதிக்கிறார்கள். பண்டிதர்கள் தங்கள் தங்கள் சுப அசுபகாலங்களில் வடமொழியை உபயோகிக்கவே விட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். இன்னும் வருகிறார்கள். சொல்லுகிறவன் இன்னதைத்தான் சொல்லுகிறான் என்றாவது அறிய இவர்கட்கு முடிவதில்லை. தமிழ்பண்டிதர்கள் எனப்பட்டோர் இவ்வாறு தங்கள் வரையிலேயே தமிழை உல்லங்கனம் செய்யும்போது பிறர் தமிழை எப்படி ஆதரிப்பார்கள்? இப்போதோ சுயமரியாதைத் தமிழ்த்திருமணங்கள் ஏராளமாக நடக்கின்றன. இப்போது திருமணங்கட்கும் மற்றும் வேறு எதற்கும் தமிழ் மந்திரம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆகையால் தமிழ் பண்டிதர்கள், வித்வான்கள் யாவரும் தங்கள் தங்கள் விசேஷத்திற்கு தமிழையே ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓர் பெரியார் தொன்மொழிகளாகிய கிரேக்க, லத்தீன், சமஸ்கிருத பாஷைகளின் உயர்வைப்பற்றி ஓர் பத்திரிகையில் விவரித்திருக்கிறார். சமஸ்கிருதத்தின் அழகையும் பாராட்டி அதையும் விரிவுபடுத்தியிருக்கிறார். சமஸ்கிருதம் என்ற வார்த்தையே 'சம்யக்—கிருத அதாவது செம்மையாக அமைக்கப்பட்டதாம். இருக்கலாம். நாம் மறுக்கவில்லை, செம்மையாக அமைக்கப்பட்ட பாஷையைவிட செம்மையாய் அமைக்கப்படாத கிரேக்க, லத்தீன் பாஷை மிகுதியும் பாராட்டப்படுகிறது.பேசப்படுகிறது, செம்மையாய் விளங்குகிறது. சமஸ்கிருதத்திலேயே ஒருவராகிலும் பேசக்கூட முடியவில்லை. ஆகவே நம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் இப்பாஷையை ஒழித்துவிட்டு நம் புனிதமான தமிழையே நம் கடவுட்கட்கு கற்றுக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இது நிற்க தமிழ்பாஷை விருத்தியாகாததற்குக் காரணம் தமிழ் பாஷைகளில் போதிய நூல்கள் இல்லாததும், அப்படி இருக்கும் கொஞ்சம் நூல்களிலும் அசங்யமான விஷயங்கள் விவரிக்கப்பட்டிருப்பதுமாகும். உதாரணமாக இராமாயணத்தை எல்லோரும் கொண்டாடுகிறார்கள். படிக்கிறார்கள். இதில் குறைவில்லை. சீதையை வர்ணிக்கும் இடங்களில் எவ்வளவு அசங்கியமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது தற்போது சில நாவல் ஆசிரியர்கள்கூட பெண்கள் அழகை விவரிப்பதென்றால் மிகவும் சாமர்த்தியமாக நான்கு வரியில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையை கையாளுகிறார்கள். அவர்கள் ஸ்தன அழகையும் மற்றும் விவரிக்கக்கூடாத அங்கங்களையும்விவரிப்பது இல்லை. கிரேக்க கவிஹோமர் கம்பரைவிட மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார். இன்னும் பரமசிவன் பார்வதியை நூறுதேவவருடம் புணர்ந்தாராம். இதுகண்டு தேவர்கள் எல்லோரும் சிவனிடத்தில்போய் முறையிட்டார்களாம். என்ன அசங்கியமான சங்கதிகள் பாருங்கள். இவ்வாறு தமிழின் முக்கிய நூல்களே இவ்வாறு இருந்தால் அதுவும் கடவுள் அருளால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுபவையே இவ்வாறு இருந்தால் தமிழ் எவ்வாறு முன்னேறும். பிறபாஷைகளில் மொழி பெயர்த்தால் அன்னியர்கள் சிரிக்கும்படி நேரிடும். ஆகையால் இம்மாதிரியான ஆபாசமான நூல்களை ஒதுக்கி பகுத்தறிவுள்ள பிரயோஜனமுள்ள நூல்களை வெளியிட்டால் தமிழ் முன்னேறும். முக்கியமான இடங்களில் தமிழ் சங்கங்களும், தலைமைத்தமிழ் சங்கம் ஒன்றும், புத்தகங்கள்இயற்ற பல சீர்திருத்த நோக்கங்கொண்ட தமிழ்பண்டிதர்கள் அடங்கிய ஓர் கூட்டமும் ஏற்படுத்தவேண்டும் ஒரு சாராருக்கே ஓர் பாஷை படிக்க உரிமையுண்டென மதித்து அப்பாஷைக்கே நம் ஆலயங்களில் உரிமையும் கொடுக்கப்பட்டு கோவில் வருவாயைக்கொண்டு அதற்கே சில விடப்பட்டும் வருகிறபடியால் அப்படிப்பட்ட கோவில் டிரஸ்டிகளையும், கர்த்தாக்களையும் தமிழுக்கே செலவு செய்யும்படி தமிழபிமானிகள் முயற்சி செய்யவேண்டும். இதற்கு அநுசரணையாக கரந்தை தமிழ்ச்சங்கத்தில் ஓர் தீர்மானம் செய்திருக்கிறார்கள், அதாவது (18-வது தீர்மானம்)

'தமிழ் நாட்டில் செல்வமிக்க சைவவைணவ திருக்கோயில்களில் வரும் மிகுந்த வருமானத்தின் ஓர் பகுதியைத் தமிழ் வளர்ச்சிக்கு, பயன்படுத்தும்படி இந்து அற நிலையப் பாதுகாப்புக்கழகத்தையு வேண்டுகிறது' என்பதேயாகும்.

பண்டிதர்களாகிய நீங்கள் உங்கள் பண்டிதத்தன்மையின் முக்கியமான பாகங்களை எடுத்துக்காண்பித்து வந்ததால் ஜனசமூகம் யாதொரு பயனும் அடையவில்லையென்பது உங்களுக்கு தெரிந்துவிட்டது.

"இறைக்கடை துடித்த புருவ
வத்தள் எயிற்றென்னும்
பிறைக்கடை பிறக்கிட மடித்த
பிலவாயிவள்
மறைக்கடையரக்கி வடவை
கனலிரண்டாய்
நிறைக்கடன் முளைத்தென
நெருப்பெழ விழித்தாள்"

என்று ஜானகி வரும் காட்சியை எழுதுவதிலும், கம்பர் கவி இன்பத்தை விவரிப்பதிலும் பிரயோஜனமில்லை. திருக்குறளை ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளில் மொழி பெயர்த்து வெளியிடுகிறார்கள். புராணத்தைப்பற்றியும் காவியத்தைப்பற்றியும் புத்தகம் எழுதும் நீங்கள் மற்ற பிறபாஷைகளிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கக்கூடாதா? இதற்குத் தமிழ் மட்டும் கற்ற பண்டிதர்கள் பிரயோஜனப்பட மாட்டார்கள். இரண்டு மூன்று முக்கிய பாஷையாவது தெரிந்திருக்கவேண்டும்.

இன்னும் விஞ்ஞான சாஸ்திர நூல்கள் பல எழுதப்படல்வேண்டும். சிலர் விஞ்ஞான சாஸ்திர வார்த்தைகள் தமிழில் இல்லை என்று சொல்கிறார்கள். இது தப்பெண்ணமேயாகும். ஆங்கிலேயர்கட்கும் ஓர் காலத்தில் இக்கஷ்டம் உண்டாயிற்று. ஆங்கில விஞ்ஞான நூல்கள் எல்லாம் ஆங்கிலத்தில் தோன்றியதல்ல. பிரஞ்சு, ஜர்மன் முதலிய பிறபாஷைகளிலிருந்து எடுக்கப்பட்டதாகும். ஆங்கிலப்பதங்கள் இல்லாத இடங்களில பிறமொழிப் பதங்களை ஆங்கிலேயர்கள் அப்படியே வழங்கினர். காலக் கிரமத்தில் அப்பதங்களும் ஆங்கிலம் ஆய்விட்டது. தமிழ் விஞ்ஞான சாஸ்திரத்தை மறுக்கிறது. மூடப்பழக்க வழக்கத்துக்கு அடிமைப்படுத்தக் கூடிய நூல்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளை எல்லாம் ஒழித்து பகுத்தறிவை மூட்டி தமிழில் ஏராளமான நூல்கள் வெளி வந்தால்தான் தமிழ் சிறிதாகிலும் முன்னேற்றமடையும். இவைகளை எல்லாவற்றையும் தமிழ் மகாநாட்டாராகிய நீங்கள் கவனித்து முடிவு செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

புராணத்தை விநாயக மூர்த்தியின் சந்நிதானத்தில் நின்று ஓர் முறை படிக்கக்கேட்டுவிட்டால் இம்மைப் பாவமனைத்தும் நாசமாகி 16 பேற்றினையும் அடைவதோடு கிடைத்தற்கரிய இந்திரப்பதவியையும் பெற்று வாழ்வார்கள். இறுதியில் அழியாத சாயுஜ்யபதவியும் கிட்டும்.

இவற்றையெல்லாம் நாமாகக்கற்பனை செய்து கூறவில்லை. மேன்மை தங்கிய 'விநாயக புராணத்தில்' உள்ளதுதான், சந்தேகமுண்டானால்அவர்கள் உடனே 'விநாயக புராணம் சோமகாந்தம் முக்திப்படலம் 71, 72, 73, 74, 75-ம் பக்கங்களைப் புரட்டிப்பார்த்துச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளட்டும்.

புராண மகிமை இப்படி இருக்க பக்தர்கள் இவற்றை நம்பாமல் படிப்பதும், உத்தியோகம் செய்வதும், பணம் சேகரிப்பதும், தானதர்மம் செய்வதும் இவர்களது புராண அவநம்பிக்கையின் பாலேற்பட்ட செயல்களாகின்றன. எனவே இதனாலும் ஆஸ்திகம் அழிந்து போயிருக்கலாம்.

“ஆஸ்திகம் அல்லது நாஸ்திக”ம் என்றவரையறையை எப்பொழுது வைதீகர்கள் ஏற்படுத்திவிட்டார்களோ, அப்பொழுது அவர்களின் கூற்றின்படி ஆஸ்தீகம் அழிந்து விட்ட இடத்தில் நாஸ்தீகம் வியாபிக்க வேண்டயதுதானே நியாயம்? எனவே இந்த நீதிப்படி பார்ப்பினும் ஆஸ்தீகர்கள் மீது சினங்கொள்வதற்கும், ஆஸ்தீகம் அடிமாண்டுபோகிறதே என அங்கலாய்ப்பதற்கும் காரணமில்லை. இவை நிற்க;

உலகச்சரித்திரத்தை உற்று நோக்கினும் இவ்வுண்மை நன்கு புலனாம் இதனைமுக்கியமாய் வாலிபர்கள் கவனிக்கவிரும்புகிறோம். ஐரோப்பாவில் போப்பின் கையில் அரசியல் நிர்வாக அதிகாரம் அடிமைப்பட்டுக்கிடந்த வரையில் அரசர்கள் எந்தவிதமான சீர்திருத்தத்தையும் செய்யமுடியாதவர்களாகவே இருந்தார்களென்பதும், போப்பின்கையிலிருந்து மீட்டு, மன்னர்கள் கைக்கொண்டதன் பின்னர்தான் சமூகச் சீர்திருத்தங்களைச் செய்ய முடிந்ததென் பதையும்மேல் நாட்டின் சரித்திரம் (English history) கற்ற எவரும் நன்கறிவார்.

சமீபச்சான்றாக மற்றோர் உதாரணம் தரலாம். தற்சமயம் உலகெங்கும் வேலையில்லாத்திண்டாட்டம் நிறைந்து அதனால் கோடிக்கணக்கான மக்கள் உண்ணவழியின்றி உழல்கின்றார்களென்பதைப்பலரும் நன்கறிவர். ஆனால் இதேசமயத்தில் நாட்டிலுள்ள வேலைகளுக்காக, நெருக்கமான ஜனத்தொகையைக் கொண்ட “ரஷியா” தேசம் தன்னிடமுள்ள தொழிலாளர்களின் தொகை போதாமல் பிறதேசங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைத்தருவித்துக் கொண்டிருக்கிறதென்பது ஆச்சரியப் படத்தகுந்த விஷயமேயாகும். அந்நாட்டில் கிளர்ச்சியேற்பட்டு அதன்பயனால் “ஆஸ்தீகத்திற்கு ஐ. பி.” கொடுக்கப்பட்டவுடன் கைத்தொழில் செழித்து ஓங்கி வளரவாரம் பித்து விட்டது. காரணமென்னவெனில், கோவில்களிலும், முத்தி மோக்ஷத்திலும், செலுத்தப்பட்டிருந்த அந்நாட்டு மக்களின் அறிவும் பணமும், இது போது கைத்தொழில் அபிவிருத்தியிலும் கல்வியிலும் திருப்பப்பட்டிருக்கிறது. எனவே அந்நாட்டில் ஆஸ்திகம் அடிமாண்ட பின்னர் கல்வியும் கைத்தொழிலும் அப்பணத்தினால் போஷிக்கப்பட்டு முன்னேற்றமடைந்திருப்பதில் ஆச்சரியமில்லை.

வைதீகத்தைக் கடைப்பிடிப்பதே ஆஸ்தீகமென்றும், வைதீகத்தன்மையைத்துறந்தது நாஸ்தீகமெனவும் கூறப்படுகிறது. ஓர்காலத்தில்துருக்கி தேசம், வைதீகக்கட்டுப்பாட்டில் தலை சிறந்து விளங்கியது. ஆனால் “ஐரோப்பாக்கண்டத்தின் நோயாளி” என்றுதான் அது பிறநாட்டினரால் அப்போது கருதப்பட்டுவந்தது. சமீப காலத்தில் வீரர், கமால்பாட்சாவின் புரட்சியால், வைதீகத்தின் பெயரால் அடிமைத்தளை பூட்டப்பட்டிருந்த பெண்டிர் சமூகம், மக்களின் அறிவும், நாணயமும் சமூகத்துறையில் திருப்பப்பட்ட பின்னர்தான் அந்நாடு முற்போக்கடைந்தது என்பதை யாரே மறுத்தற்கியலும்? வைதீகக் கட்டுப்பாட்டால், வெளியே பெண்கள் வரலாகாதெனவும், பெண்கள் தங்கள் முகமூடிகளை அகற்றவே கூடாதெனவும் செய்யப்பட்டிருந்த “ஆஸ்தீகச்சட்டம் ஐ. பி” பெற்றவுடன், பெண்கள் வெளிவரமுடிந்தது: முகமூடி மாண்டு மறைந்தது. இன்று பெண்கள் அந்நாட்டின் எல்லாத் துறைகளிலும் இடம் பெற்றிருக்கின்றனர். அதன் பயனாய், முன்னர் ஐரேப்பாவின் நோயாளியாயிருந்த அதே “துர்கிஸ்தானம்” இன்று “ஐரோப்பாவின் பலசாலி” (!) யாகத் திகழ்கிறது.

இன்னோரன்ன பலசான்றுகளால் ஆஸ்திகத்திலழுந்தி, சாமி, சத்திரம் கோவில், குளம், நரகம், மோட்சம் என்ற இந்தவகை களிலேயே நாட்டு மக்களின் அறிவும், நேரமும், பணமும் செலவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் வரை கைத்தொழில், கல்வி பொருளாதாரம், சுகாதாரம் முதலிய பிறதுறைகளில் உழைக்க நேரமும் புத்தியும் பணமும் மற்று அந்நாட்டு மக்கள் தவிப்பரென்பதையும், அதன் பயனால், அந்நாடு வலியிழந்து நிற்க வலிமையடைத்து முற்போக்கு பெற்றுள்ள பிற நாட்டின் உதவியை இந்த ஆஸ்தீக நாடு எதிர்பார்த்துப் பிழைக்கவோ அல்லது அதற்கு அடிமைப்பட்டுக்கிடக்கவோதான் செய்யுமென்பதையும்; வைதீகத்தை வெட்டி வீழ்த்தி அதன்மேல் சீர்திருத்தப் பாதையைச் செப்பனிட்டுச்சென்ற பின்னரே வாணிபமும், கல்வியும், கைத்தொழிலும் சிறந்தோங்கி முன்னேற முடியுமென்பதையும், பகுத்தறிவுடைய எவரும் எளிதில் உணர்வர்.

அடுத்தபடியாக நம் நாட்டைக் கவனிக்கின்; இந்நாட்டு மக்களின் அறிவு அடைக்கலம் புகுந்திருப்பது “கடவுள்” எனும் வார்த்தையிடத்திலும், இவர்கள் இரத்தப்பாடுபட்டுத் தேடியபணம், கோவில், குளம், தான தர்மம், பிரார்த்தனை, தட்சணை, திருநாள் முதலிய வைதீக ஆஸ்திக காரியங்களிலேயே விரையம் செய்யப்படுகிற தென்பதையும், இம்மக்களிடம் எதைக்கூறினும், கடவுள், கடவுள்செயல்; விதி, என்னவோ கொடுத்து வைத்தது ‘என்பன போன்ற மௌடீக பதங்களே பதிலாக வருகிற தென்பதையும், இதனால் இந்நாட்டு மக்களது அறிவு மழுங்கிப் பிற்போக்கான வழியிலேயே சென்று கொண்டிருக்கிறதென்பதையும் சுயநலமற்ற தன்மையும் உண்மைகாணும் சுபாவமுமுடைய எவரும் தயங்காது ஒப்புக் கொள்வர்.

எனவே இந்நாடு அடிமை யினின்றும் நீங்கி பிறநாட்டினருடன் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமாயின், இங்குள்ள ஆஸ்திகம் அழிய வேண்டும். வைதீக விலங்குகளைத் தகர்த்தெறிய வேண்டும். சாமியிலும் சத்திரத்திலும் அழுந்திக்கிடக்கும் மக்களின் அறிவு, கல்வியிலும், கைத்தொழிலிலும் செலுத்தப்படல் வேண்டும். இவர்களின் அறிவை விலங்கிட்டு வைத்திருக்கும் சாமி பயமும்.சாத்திர பக்தியும் இவர்களிடமிருந்து விலக வேண்டும். “வருவதெல்லாம் ஆண்டவன்கட்டளைப்படி” என்ற எண்ணம் மாறி, ஏன் வந்தது? எப்படிவந்தது? என்று ஆராயும்வழியில் இவர்களின் புத்தி செலுத்தப்படல் வேண்டும். “பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகாலவகை” என்னும் உண்மை உரையின் உண்மையை இவர்கள் உணரவேண்டும். அப்பொழுது “மாமூல்,” “மாமூலினின்று மயிரிழை புறண்டாலும் சாமி கோபத்தால் மண்டை வெடித்துவிடும்” என்ற அறட்டல்களின் சுயநலத்தை மக்கள் தாங்களாகவே உணர்வர்.

சுருங்கக்கூறின் இந்நாட்டு மக்களின் மண்டையில் புகுந்திருக்கும் அர்த்தமற்ற ஆஸ்திகத்தை, வைதீகத்தை அப்புறப்படுத்தி விட்டால் காலியான அந்த இடத்தில் சீர்திருத்த உணர்ச்சி தானாகவே குடிபுகும் என்பது எவரும் மறுக்கொணா உண்மையாம்.—எனவே இந்நாடு “ஆஸ்திகத்திற்கு ஐ. பி.” கொடுத்த அன்றுதான் உருப்படும் என்று சுயமரியாதை இயக்கம் கூறுவதில் தவறில்லையென்பதை வாலிபர்கள் தெரிந்தொழுகுவார்களாக. காலச்சக்கரத்தின் மாறுபாட்டைக் கவனித்து, காலத்தோடொட்டி ஒழுகாது அவ்விதப் பிரசாரம் செய்வோரையும் நேரிய முறையால் வாதம் புரிந்து தங்கள் கொள்கைகளை நிலைநாட்டாமல், சும்மாமுட்டாள், அறிவிலி என்று சனாதன தார்மிகளும், அசடுகளும் கத்தினால் அது வீணேயாம்.

## தோழர். ராம. சின்னையா மலாய் நாடு செல்கின்றார்

20-7-30 சென்னையிலிருந்து மாலை 4-மணிக்குப் புறப்படும் “ரஜுலா” என்ற கப்பலில் திருமயம் தோழர். ராம. சின்னையா அவர்கள் மலாய்நாடு செல்கின்றார். அவரை தோழர்கள். அ. பொன்னம்பலம். நாகை காளியப்பன். எஸ். குருசாமி பி. ஏ., டி. வி. சுப்ரமணியம் (திராவிடன்ஆசிரியர்) சுப்பிரமணியம் பண்டிட் திருஞான சம்பந்தர், திருமதிகள் எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல்டி., எஸ். காந்தம், செல்லம்மாள், தீனதயாளு முதலியவர்கள் கப்பலுக்குச் சென்று வழியனுப்பினார்கள். ஒரு புகைப்படமும் எடுக்கப் பெற்றது.

### பிரிவுபசார விருந்து

திருமயம். தோழர், ராமசின்னையா அவர்கள் 20-7-32-ல் சென்னையில் “ரஜுலா” கம்பலில் பிரயாணமாகுவதை முன்னிட்டு திருமயம் தோழர்களால் ஒரு பிரிவுபசார விருந்து ஒன்று 18-7-32உ. மாலை நடைபெற்றது. அதற்குப் பல தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள். இரவு 8-30 மணிக்கு திருமயம் ஸ்டேஷனிலிருந்து தோழர்கள். ராம. சின்னையா, அ பொன்னம்பலம் ஆகியவர்கள் சென்னைக்குப் பிரயாணமானார்கள்.

### ஸ்ரீரங்கத்தில் வரவேற்பு

ஸ்ரீரங்கம் ரயில்வே நிலயத்தில் தோழர்கள் டி- துரைசாமி, எஸ், ஆர். முனுசாமி, லெட்சுமணய்யா, கோவிந்தராஜு, முதலியவர்கள், தோழர்கள் ராம. சின்னையா, அ. பொன்னம்பலம் ஆகியவர்கட்கு மலர் மாலை சூட்டி வரவேற்று வழியனுப்பி வைத்தார்கள்.

## கோயமுத்தூர் தேவாங்கர் கல்வி அபிவிருத்தி சங்கம்.

இச்சங்கத்தின் வருடாந்திரக் கூட்டம் 16-7-32ந் தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோவை தேவாங்கச் சிறுவர்சபை கட்டிடத்தில் திருவாளர் ராவ்சாகிப் சி. எம். ராமச்சந்திர செட்டியார் பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமையில் கூடிற்று. அப்பொழுது 1932-33 வருஷத்துக்கு 41 பிள்ளைகளுக்குப் பாதி உபகாரச்சம்பளம் கொடுப்பதென்று தீர்மானம் செய்யப்பட்டது.

சென்ற வருஷம் 41 பிள்ளைகளுக்குஉபகாரச்சம்பளம் கொடுத்ததில் 34 பிள்ளைகள் தேறினார்கள்.

பரோபகாரமுள்ள கனவான்கள் இச்சங்கத்துக்குத் தங்களாலியன்ற பொருளதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது என காரியதரிசி எழுதுகிறார்.

# காரைக்குடியில் சீர்திருத்தத் திருமணம்.

சென்ற 7-7-32 வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு காரைக்குடி தெற்குத்தெரு சா. நா. சா. தெ, அவர்கள் இல்லத்தில் கோட்டையூர் யூனியன் போர்டு மெம்பர் திரு. ப. மு. நாராயணன் அவர்கள் தலைமையில் திரு. வி. இராமச்சந்திரன் அவர்கட்கும், திருமதி மெய்யாத்தாள் அவர்கட்கும் திருமண ஒப்பந்தம் நடைபெற்றது.

திருமணத்திற்கு திருவாளர்கள் எஸ். லட்சுமிரதன் பாரதி எம். ஏ. பி. எல்., ஈப்பன் பி. ஏ. பி. எல்., கே. வி. அழகர்சாமி, அ. பொன்னம்பலம் முதலியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

இத்திருமணத்திற்குத் தலைவராக ஒப்புக் கொண்டிருந்த காரைக்குடி திரு. இ. ராம. இராமச்சந்திரன் சேர்வை தேவகோட்டையில் ஒரு வழக்கின் காரணமாகத்தான் வரமுடியாது போயிற்று என்று அறிவித்திருந்தார். புதுவை பிரஞ்சிந்திய மந்திரி தோழர் ஏ. வி. முத்தையா பி. ஏ., பி. எல்., ஜோலார்பேட்டை தோழர் வி. பார்த்தசாரதி சென்னை தோழர் கே. முத்துச்சாமி வல்லத்தரசு, தோழர் எஸ். குருசாமி பி. ஏ., தோழர் அ. இரத்தின சபாபதி, அன்னபூரணி, விருதுநகர் தோழர் வி. வி. இராமசாமி, காரைக்குடி தோழர் சொ. முருகப்பா மரகதவல்லி உறையூர் தோழர் ச. ம. சி. பரபசிவம் முதலியவர்களிடமிருந்து மணமக்களைப் பாராட்டி தந்திச் செய்திகளும், கடிதங்களும் வந்திருந்ததை வாசித்தார்கள். ஸ்ரீ கொப்புடைய நாயகி வித்தியசாலை ஆசிரியர் தோழர் ஜெகநாதம் அவர்கள் பாடிப் மணமக்கள் வாழ்த்துப் பத்திரத்தை தோழர் எம். மணித்தெண்டன் அர்கள் வாசித்தார் மாணவிகள் கீதம் பாடினார்கள்.

தோழர்கள் பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி அவர்கள். பண்டிட் ஆதிமூலம் அவர்கள் நலவுரிமைத் தொண்டர் சங்கத்தலைவர் கு. ம. சோமசுந்திரம் அவர்கள் ந. வள்ளிமயில். காவேரி. மெ. கிளிமொழி அ. பொன்னம்பலம் முதலியவர்கள் திருமணத்தைப் பாராட்டி விரிவுரை நிகழ்த்தினார்கள்.


தோழர் இ. பெரி. இ. மெய்யப்பா அவர்கள் எல்லோருக்கும் நன்றி கூறினார். பின்னர் மணமக்களுடன் ஒரு புகைப்படம் எடுத்தார்கள் மணமக்கள் ஊர்வலமாக மணமகன் இல்லம் அனுப்பினார்கள். இரவு 8 மணிக்கு சமபந்தி விருந்தொன்று நடைபெற்றது. இத்துடன் திருமணம் இனிது முடிவுற்றது.

## சுயமரியாதைச்சங்கம் சாக்கோட்டை.

டி சங்கத்தின் அங்கத்தினர்கள் கூட்டமொன்று 17—7—32 மாலை 5-மணிக்கு திரு. எஸ். கோபால கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் சங்கக்கட்டிடத்தில் கூடிற்று.

அதுசமயம் காலியாகவிருந்த உபதலைவர், உபக்காரியதரிசி ஸ்தானங்களுக்கு திரு. எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்களையும், திரு. ஆர். முத்துகிருஷ்ணன் அவர்களையும் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

பின் சங்க சம்பந்தமான சில விஷயங்களை ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டு பேசியபின், காரியதரிசி யாவருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது எனக் காரியதரிசி எழுதுகிறார்.



திருமண தம்பதிகள்:— ராமச்சந்திரன்—மெய்யாத்தாள்.

## காரைக்குடி.

### சுயமரியாதை மகாநாட்டுத் தலைவருக்கு தேநீர்விருந்து

16-7-32ல் காலை புதுவை அரசாங்க அமைச்சர், ஏ. வி. முத்தையா பி. ஏ. பி. எல். அவர்கள், இராமநாதபுரம் இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டிற்கு தலைமை வகிப்பான் வேண்டி, ரயில் மார்க்கமாக வந்து சேர்ந்தார். அவரை காரைக்குடி வாசிகளில் பலர் ரயில் ஸ்டேஷனில் வரவேற்று உபசாரம் செய்தனர். திரு. அமைச்சருடன் லகாஷ் தம்பதிகள், பாரதிதாஸன் முதலியோரும் வந்திருந்தனர். எல்லோரும் முத்துப்பட்டினம் ராம சுப்பையா இல்லத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர். இன்று பகல், தலைவர் முதலியோர்களுக்கு திரு. ராம சுப்பையா அவர்கள் இல்லத்தில் விருந்து நடத்தப்பெற்றது. மாலை 4 மணிக்கு காரைக்குடி முனிசிபல் வைஸ் சேர்மென், எம். ஆர். எம். பெரியணன் செட்டியார் அவர்கள் பங்களாவில் கனம் அமைச்சர் அவர்களுக்கு தேநீர் விருந்தொன்று நடைபெற்றது. விருந்திற்கு காரைக்குடி முனிசிபல் சேர்மன் திவான்பகதூர் ஆவி. பழ சிதம்பரஞ்செட்டியார், என். எஸ். வெங்கட்ராமய்யர், சகஜானந்தம் எம். எல். சி. ஏ. பொன்னம்பலம், ராம சுப்பையா அஸ்போன் லகாஷ் தம்பதிகள், பாரதிதாஸன். சி. மு. அரு. நாராயணன் செட்டியார், காசிச்செட்டியார் முதலிய முக்கியஸ்தர்கள் விஜயம் செய்திருந்தனர். திவான்பகதூர் அவி. பழ. சிதம்பரம் செட்டியார் அவர்களால் விருந்திற்குப் பின் திரு, அமைச்சருக்கு மலர் மாலை சூட்டப்பெற்றது. சங்கீதக்கச்சேரி சிறிது நேரம் நடைபெற்றவுடன் விருந்து இனிது முடிந்தது. (நமது நிருபர்.)


## “செவிடு”

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது “காமதேனு எண்ணையே” ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனாம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.



## உடனே தேவை.

நமது பத்திரிகை விற்பனை செய்வதற்குக் கீழ்க்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் உடனே தேவை.

சேலம்.
கோயம்புத்தூர்.
பொள்ளாச்சி.
ஜோலார்பேட்டை.
தஞ்சாவூர்.
வாணியம்பாடி.

விபரங்களுக்கு எழுதவும்.

மேனேஜர், குடி அரசு.


## கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

கட்டுப்பாடுகள் விதவைப் பெண்டிரின் இயற்கை உணர்ச்சியை அடக்கி ஒடுக்கிவிடுவதாயுமில்லை! எனவே, வைதவ்யக் கூற்றில் எள்ளளவும் பொருளேயில்லை! இத்தகைய அநீதியான, பிற்போக்கான, சுயநல, நயவஞ்சக, மௌட்டீகக்கட்டுப்பாடுகளென்னும் பெருவிலங்கால் பெண்டிர்சமூகத்தைப் பிணிக்கவேண்டாம். அவ்விலங்கைக் கழற்றி யெறியுங்கள், மனித ஜென்மத்திற்குள்ள மரியாதையை எங்களுக்கு அளியுங்கள்! என்றுதான் ஆடவரைக்கேட்கிறோமேயல்லாது, எங்களைப் பிணித்திருந்த இப்பெருவிலங்குகளை கழற்றி, ஆடவர்கள் அணிந்து கொள்ளுங்கள் என்று கூறினோமில்லை! இந்நாட்டின் பதினாறுகோடி எண்ணிக்கையைக் கொண்ட பெண்சமூகத்தின் இவ்வேண்டுகோள், அநீதமானதா? அக்கிரமமானதா? அனுசிதமானதா? என்பதை அறிஞர்களே! சகோதரிகளே!! ஆலோசித்துப் பாருங்கள் நீங்களே.

இவ்வாறு கேட்கையில், பெண்கள் இப்படிப்பேசுவதால் 'கற்பு' கெட்டுவிட்டது, மாமூல்மாண்டு விட்டது, சனாதனதர்மம் செத்து மடிந்துவிட்டதுஎன்று வைதீகர்கள்கூக்குரலிடுகிறார்கள். இக்கூற்றிற் ஏதேனும்பொருளிருக்கிறதா என்பதை அறிவுடையயோர் ஆராய்ந்து பார்க்கட்டும்! எனதருமை இந்தியச் சகோதரிகளே! மேலே கூறியவாறு, 'பெண்டிர் விடுதலைச் சமதர்மமுரசு" உலகெலாம் ஒலிக்கிறது! இப்பேரொலியும், இதற்கெதிராக இந்நாட்டுவைதீகர்கள் தொண்டைகிழியக் கத்தி, மண்டை உடைத்துக் கொள்ளும் கூக்குரலும் இமயமுதல் குமரிவரையும், அதற்கப்பால் கடல் கடந்தும் ஒலிக்கிறதே இந்திய சகோதரிகளே! இப்பேரொலி உங்கள் காதுகளில் விழவில்லையா? சுதந்தரத்தென்றல் முற்றி, சண்டமாருதமாய் வீசுகிறதே! "பெண்டிர் விடுதலையே தேசவிடுதலை" "சரிநிகர்சமம்" என்ற ஓங்கியதொனியும் இதோ! தமிழ் நாட்டின் "தன்பதிப்பியக்கம் உங்களைத்தட்டி எழுப்புகிறதே! இத்தகைய புரட்சிகளால் நாடிருக்கும் குழப்பத்திலேயே, அல்லோலகல்லோலத்திடையே, அந்தோ! அருமைச் சகோதரிகாள்! நீங்கள் எப்படி அயர்ந்து நித்திரை செய்கிறீர்கள்? இந்நிலையில் உங்களுக்கு நித்திரையும் வருகிறதா?

தோழிகாள்! போதும் உங்கள் நித்திரை! எழுங்கள்! எழுங்கள!! பொழுதுபுலர்ந்தது யாம்செய்த தவத்தால்! சுயமரியாதைச் சூரியன் தோன்றிக் காய்கின்றான்! அவ்வொளியில், அஞ்ஞான விருள் அகன்று ஓடுகின்றது! சுயநல, நயவஞ்சக பொய் மூட்டைகள், சுட்டெரிக்கப்படுகின்றன! விஞ்ஞான ஒளியும் சமதர்ம ஒளியும், நமக்குத்துணை தருகின்றன. எனவே எழுங்கள்! எழுங்கள்!! சுயமரியாதையைக்கைக்கொள்ளுங்கள்! சுதந்தரப் பாதையே செல்லுங்கள்! வழியடைக்கும் வஞ்சகனுளர் (கொடியர்) தடையை, சூழ்ச்சியை, கற்புப் பூச்சாண்டியை, சுயமரியாதை வாளால்வெட்டி வீழ்த்துங்கள்! வீரமுழக்கம் செய்து மேற் செல்லுங்கள்! அதே நேரத்தில் நீங்கள் இல்லறச்சமாதான வாழ்க்கையின் அவசியமான உங்கள் நேரிய ஒழுக்கத்திலிருந்து தவறி வழுக்கி விழுந்து விடாதிருக்கிறீர்களா என்று பார்த்துக் கொள்ளுங்கள் "மாதர்தம்மைஇழிவுசெய்யும்மடமையைக் கொளுத்துவோம்! தாதரென்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

சகோதரிகளே! விழிமின்! எழுமின்! சமத்துவம் பெறும்வரையில் சலியாதுழைமின்! முடிவில் வெற்றி உங்களுக்கே! நமக்கே! பெண்டிர் சமூகத்திற்கே!

## கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்

எமது சங்கவேண்டுகோட்கிணங்கி சங்க ஆதரிப்பாளர்களாயிருந்து சங்க நடைமுறைகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்க ஒப்புக்கொண்ட தோழர்களுக்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம் என காரியதரிசி எழுதுகிறார்.

உங்கள்

கண்ணையும்

காதையும்

கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும் நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், ஜலவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works

Beadon St. Calcutta

## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

வேலூர்.
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்.
சிங்காரவேல்பிள்ளை, அப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வநாதம், வெற்றிலைக்கடை கல்லுக்கட்டி.

மதுரை.
வி. டி. சங்கரலிங்கம், செட்டியூரணி தெரு.

கலப்பு மணத்தால் தான் ஜாதி ஒழியும்.

Goshaye office pillss.

கோஷாயி

ஆபீஸ் மாத்திரை



உதவி டாக்டர் Dr. T. K. V Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—; 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சாஜ் வேறு.

டாக்டர் B. A. எதிராஜ்,
(காலரா பைரி) கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.



நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

டப்பி 1க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி; ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான சற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி. S. I.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உயர்வடைவதற்காய சந்தர்ப்பமேற்படும் வரையிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் பிரத்யேகமான வசதிகள் அமைக்கவேண்டுமென்றால் நம்மை தேசிய விரோதமான வகுப்புவாதச் சச்சரவுகள் செய்பவர்களாகப் பறையறைகின்றனர்.

அன்னிய அரசாட்சியை ஒழிப்பது மட்டும் சுயராஜ்யமாகக் கருதி மக்கள் கட்டுண்டு அடிமைகளாக வாழ்வதற்குக் காரணமாய பழக்க வழக்கங்களாகிய இரும்புத்தளைகளை "மதநடுநிலை" என்ற பெயரால் இருந்தபடியே என்றும் நின்று நிலவச் செய்யும் காங்கிரஸ் திட்டத்தையும், இன்னும் இன்னோரன்ன அவர்தம் குறைகளையும் நாம் எடுததுக் கூறுவதினால் நம்மைச் சுதந்திரம் வேண்டாத தேசத்துரோகிகளென்று முரசறைகிறார்கள். பெண்களுக்கு விடுதலை அளித்து அவர்தமை நமக்குச் சரிநிகர் சமானமாக நடத்தவேண்டிய சமத்துவக்கொள்கையை பரப்பினால் இந்திய சமூகத்தை கெடுக்க வந்த வம்பர்களாக நம்மைத்திட்டுகிறார்கள். அன்பற்ற, காதலற்ற, உரிமையற்ற, பெண்ணடிமை கொள்ளுகின்ற மாப்பிள்ளையை விலைக்குப்பிடிக்கின்ற பால் மணம் மாறாத குழந்தைகளை மணவினையில் பூட்டுகின்ற தெய்வீகத் திருமணங்களை ஒழித்து இவ்வுலக வாழ்க்கையில் இன்பம் தரும் கருத்தொருமித்த காதல் வாழ்க்கையைக் கைக்கொள்ளும்படியாகச் சொன்னால்,கற்பையும் குலத்தையும் ஒழுக்கத்தையும் குடும்ப வாழ்க்கையையும் கெடுக்கவந்த கோடரிக்காம்புகளென இறைச்சல் போடுகிறார்கள். எனவே இத்தகைய இழிவுறு அறிவும், சூழ்ச்சித்திறனும் போதிய செல்வாக்கும், வேண்டிய பணமும் படைத்த நமது விரோதிகளின் விஷமப்பொய்ப் பிரசாரங்களுக்கிடையே நமது கொள்கைகளான சமதர்மத்தையும், சகோதரத்துவத்தையும், சமூக நியாயத்தையும், உண்மைச்சுதந்தரத்தையும், பெண் விடுதலையையும், காதல் மணத்தையும், மக்களுக்கு விளக்கச்செய்வதே பகீரதப்பிரயத்தனமாயிருக்கிறது. இக்கொள்கைகள் ஒன்றிற்கொன்று பிரிக்கொணாதவாறு தம்முள் ஒன்றுபட்டு இயங்கி மிளிர்வதையே நமது கவிபாரதியாரும் "எங்கும் சுதந்திரமென்பதே பேச்சுநாமெல்லோரும் சமமென்பதுறுதியாச்சு பாருக்குள்ளே சமத்தன்மை, தொடர்பற்றுஞ் சகோதரத்தன்மை, யாருக்கும் தீமை செய்யாது, புவி எங்கும் விடுதலை செய்யும்" என்று அழகாகக்கூறியுள்ளார். இவற்றை விளக்கும் பொருட்டே மகாநாடுகளை ஆங்காங்கு கூட்டி இக்கொள்கைகளை மக்களிடையே பரப்பி அவற்றை அங்கீகரிப்பவரை நாள் தோறும் நம்முடன் சேர்த்து இவ்வியக்கத்திற்கு ஆதரவும், பலமும்,தேடி வருகிறோம். இயக்கத்தின் பலனாக் பலவிடங்களிலும் நடக்கும் எண்ணற்ற சுயமரியாதைத் திருமணங்களைத் தவிர்த்து இத்தகைய பிரசாரமே நமது முழு ……ஆனால் முக்கியமானதும் இன்றியமையாததுமான, வேலையாக இருந்துவருகின்றதெனச் சொல்லலாம். இவ்வியக்கத்திலீடுபட்ட தோழர்களோ, இக்கொள்கைகளை தமது வாழ்க்கையில் வழுவாது கைப்பற்றி அநுசரித்து வருகின்றனர். பிழைத்தல் மனிதனுக்கு இயற்கையாமென்ற வழி ஒரு சிலர் சிலபோழ்து வழுக்கி இடறினும் அதனால் நமது இயக்கத்தையாவது அதன் கொள்கைகளையாவது குறை கூறுவது பொருந்தாவழக்காம்,

நமதியக்கம் கண்ட பெரியார்களான தோழர்கள் ஈ. வெ. இராமசாமி அவர்களும், எஸ். இராமநாதன் அவர்களும், அயல் நாடு சென்றிருக்கும் காலத்தில் இயக்கத்திற்கு அருந்தொண்டாற்றிய தோழர்களிற்சிலர் இயக்க நடவடிக்கைகளிற் கலந்து கொள்ளாது விலகியிருத்தல் சிலகாலத்திற்கே என்றாலும், வருந்தத்தக்க ஒரு விஷயமாகவிருக்கிறது. எனினும் 'மனிதர் வந்து சேர்ந்து கொண்டே இருக்கலாம். அவர்கள் பிரிந்துபோய்க்கொண்டுமிருக்கலாம், நான் எப்பொழுதும் ஓடிக்கொண்டு தானிருப்பேன்' என்றாற்போல நமதியக்க உணர்ச்சி நாள்தோறும் பெருகி வளர்ந்து இளைஞர்கள் இதயத்தைக்கவர்ந்து ஓர்பெரும் புரட்சியை உண்டுபண்ணி எவ்வகையானும் இழிவுற்ற நிலையிலிருக்கும் நம்மைப் புனிதராக்கி புதுநிலையடையச் செய்தேதீரும். விலகி நிற்கும் தோழர்களும் விரைவில் வந்துசேர்ந்து கொள்வார்களென்பதற்கு சந்தேகம் கிடையாது. உண்மையும் அறமும் நிலைத்திருத்தல் மெய்யானால் நமக்கு வெற்றியுண்டு. ஐயமில்லை.

## நாமிப்போது கவனிக்க வேண்டிய விஷயங்களென்ன.

விருது நகர் மகாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க நமது இயக்கத்திற்கு சங்க மமைக்கவேண்டும். அதன் சட்டதிட்டங்களும், கொள்கைகளும் நமதியக்க நோக்கங்களுக்கிணங்க அவசியம் நேரிடும் பொழுது மாற்றியமைத்துக்கொள்ளக் கூடியனவாகவிருத்தல்வேண்டும். அதற்குபெருநிதிதிரட்டல் வேண்டும். வளம் நிறைந்த ஓரிடத்தில் சுயமரியாதைப் பல்கலைக் கழகமும், தலைச்சங்கமும் நிறுவவேண்டும். மேனாட்டு கிறிஸ்துவ மிஷன்களைப்போல பொருளீட்டு வதிலும் மக்கள் முன்னேற்றமே கருதி உழைக்க முன்வரும் ஆசிரியர்களையும் தோழர்களையும் இளைஞர்களையும் சேர்க்கவேண்டும். நமது கொள்கைகளுக்கேற்ற வாழ்க்கை முறையும், சகல விதமான கலைகளும், கைத்தொழில்களும் விவசாய அபிவிருத்தி முறைகளும் அவ்விடத்தில் போதிக்கப்படவேண்டும். பலவிடங்களிலும் இத்தகைய கிளைஸ்தாபனங்கள் அமைக்கவேண்டும். அக்கழகம் நாட்டில் நாமென்னென்ன மாறுதல்களை விரும்புகின்றோமோ அவற்றின் உண்மையையும், மேன்மையையும் வாழ்க்கையிலனுஷ்டிப்பது மூலமாக விளக்கிக் காட்டுவதாக விருக்கவேண்டும்.

நமது இயக்கத்தின் பயனாக நிகழ்ந்திருக்கும் ஆயிரக்கணக்கான திருமணங்களைப்பற்றி எவ்வித விவாதமும் பின்னால் எழாதவாறு தகுந்த சட்டங்களேற்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

தீண்டாமையை நீக்குவதற்கான வழிகளைக்கண்டு கைக்கொள்ள வேண்டும். இதற்கு முதலாவதாக அவர்களது செல்வ நிலையைச் சீர்திருத்தல் அவசியம். போதுமான சம்பளம் தரும்படியாக முதலாளிகளையும், அரசாங்கத்தையும், ஸ்தலஸ்தாபனங்களையும் வற்புறுத்தகவனித்தால்தீண்டாமை தானேஒழியும் இத்தகைய வசதிகள் ஏற்படுவதற்கு முயற்சி எடுக்காமல் தீண்டாமை ஒழிய வேண்டுமென்று கத்தினால் அதுவெறும் பேச்சேயாகும்.

ஆரம்பக் கட்டாயக் கல்வியையும், வாக்குரிமையையும் யாவரும் பெறுவதற்கான முயற்சிகள் செய்ய வேண்டும். வரம்போகும் சீர்திருத்தப்பிரகாரம் வாக்குரிமையாளர் அதிகமாவது நிச்சயமாகையால் நமதியக்கத் தோழர்கள் விரோதமாக இருக்கக் கூடியவர்களைப் பொருட் படுத்தாமல் உழைத்து பலஸ்தாபனங்களுக்கும் பின்னால் தேர்ந்தெடுக்கப் படுவார்களேயானால் நாம் விரும்பும் மாறுதல்களை விரைவில் இயற்றி நமது நாட்டை முன்னேற்ற மடையச் செய்யலாம். பெண்களுக்கு ஆண்களைப் போலவே சமமான சொத்துரிமை சட்ட மூலமாக தந்துவிட்டால் அவர்களைத்துயரப்படுத்தும் அத்தனை தொல்லைகளும் அகன்று விடும்.

எனவே தோழர்களே, இன்று நம்மை வருத்தும்இன்னல்கள் மாயவும், நன்மை வந்தெய்தி தீதெல்லாம் நலிக்வும், நிதிமிகுந்தவர் பொற்குவை தந்தும் அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளியும், ஆண்மையாளருழைப்பினை நல்கியும், மதுரத்தேமொழி மாதர்களெல்லாம் ஆசிகள் பேசியும், எதுவும் நல்கி இங்கெவ்வகையானும் இப்பெருந்தொழில் நாட்டசீரிய முயற்சிகள் செய்யும் படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக வரவேற்புக்கழகத்தின் சார்பாக மகாநாட்டிற்குச் செய்திருக்கும் ஏற்பாடுகளிலுள்ள குறைபாடுகளைப் பொறுத்துக்கொள்ளும் படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

---

[3ம் பக்கத்தொடர்ச்சி]

(Influence) சூரியன் நமது பூமியைச்செய்வதாகத்தெரியவில்லை, சூரியனுக்கும், பூமிக்குமுள்ள சம்பந்தம் இம்மட்டில் இருக்க, சூரியன் நாமாகிய அற்ப அணுமாத்திரையாகவுள்ளவர்களின் நடவடிக்கைகளை எப்படி வசப்படுத்த முடியும்? சூரியனோ, சந்திரனோ, நட்சத்திரங்களோ இந்த அற்ப சீவனை வசப்படுத்துகின்றனவென்றால் அது பைத்தியக்காரர் பிதற்றும் பிதற்றல்களேயொழிய மெஞ்ஞான முடிவு அல்லவென அறிதல்வேண்டும். நமது அனுபவமும், சோதிடம் பொய்யெனவேதெரிவிக்கின்றது. எந்த சோதிடம் மனிதனுடைய நடவடிக்கைகளை முன் தெரிவிக்கக்கண்டோம். இரண்டெழுத்து எழுதத்தெரியாத குரவர்களும் "குறி" சொல்லுகிறார்கள்! தெருத்தெருவாக ஓலை புத்தகமொன்றை விரித்து வைத்துக்கொண்டு ஜோஸ்யம் சொல்வோர் அனந்தம், வயற்றுபாட்டுக்கு பொய் சொல்லி வருகிறார்கள்? பிறருக்கு ஜோஸ்யம் சொல்லுகின்றவன் தனக்கு வரும் கேட்டை தனது ஜோஸ்ய மூலமாக அறிந்தானில்லை! சொல்லிச்சொல்லி கெவுளி அல்லது பல்லி காடிப்பானையில் விழுகின்றனவாம்! தனது கதியை அறியாமல் காடிப்பானையில் விழுந்து சாகும் பல்லிக்கூச்சலால் ஏதோபலன் உளதாக நம்பும் மக்களை என்னவென்று மதிப்பது? பல்லிவிழும் பலன் என்றே ஒரு அத்தியாயம் ஒவ்வொரு இந்திய பஞ்சாங்கத்திலும் வரைந்துள! காடிப்பானையில் தனக்குத்தெரியாமல் விழுந்து சாகும் பல்லி மனிதன் தலையில் விழுந்தால் அம்மனிதனுக்கு மரணயோகமாம்! கோடான கோடி பல்லிகள் கோடானகோடி பூச்சி புழுக்களின் மேல் விழுகின்றன, அவைகளுக்கெல்லாம் மரண யோகந்தானா? நமது வீட்டு கெவுளி வெளிச்சத்தில் வரும் ஈக்களை விழுங்கிவிடுகின்றது அவ்விதமாக பல்லியால் கொன்று தின்னப்பட்ட கோடானகோடி ஈக்களுக்கு நேரும் மரணம் பல்லி விழுந்த பலன்தானோ? ஏன்பல்லி விழும் பலன் மனிதனல் மற்ற ஜந்துக்களுக்குவுண்டாகும் பலனை ஏன் விட்டுவிடவேண்டும்? மனிதன் மற்ற ஜீவன்மேல்விழும் பலனை கசாய்கடைகளில் (Slaughter House) போய்ப்பார்த்தால் தெரியவரும். ஆடு, மாடு, கோழி, புறா, மீன் முதலிய சீவன் மனிதன் விழும்பலன் அனுதினமும் அனுபவிக்கின்றன!! இந்த பலனைப்போன்ற கொடுமை எங்குளது? மனிதன் விழும்பலனைக் குறித்து ஏன் எந்தப்பஞ்சாங்கமும் எழுதுகிறதில்லையோ அதுதெரியவில்லை? பஞ்சாங்கம் எழுதுகின்றவனும் மனிதனாய் இருப்பதால் மனிதனுடைய கொடுமைகளை வரையாமல் விட்டுவிடுகின்றான் போலும்! பூனை குறுக்கிட்டால் அது கெட்ட சகுனமாம்! விதவை, ஒத்தைப்பார்ப்பான், எண்ணைக்குடம் எதிரிட்டால் போன காரியம் ஜெயமாகாதாம்! இந்த சம்பவங்களுக்கும் நமது முயற்சிகளுக்கும் என்னசம்பந்தமென்பதே ஏற்படவில்லை. முண்டச்சிக்கும், கட்டுக்கழுத்திக்கும் என்ன வித்தியாசம்? ஒருத்தியின் புருஷன் இறந்துவிட்டான், மற்றொருவளு

மீ

டைய புருஷன் உயிருடன் இருக்கின்றான் இதுவே. ஆனால் இருவரும் பெண்மக்களே. ஏன் ஒருவர் எதிரிட்டால் அசுபமென்று கேட்கின்றேன். நமது நாட்டில்தான் சில குறிகளால் முண்டச்சி இன்னவளென்று தெரிந்து கொள்கின்றோம். அது தெரியாத ஊர்களிலோ?ஜனம் நிறைந்துள்ள நகரங்களில் ஆயிரக்கணக்கான கைம்பெண்களை சந்திக்கின்றோம்,அவர்களைநாம் கவனிப்பதில்லை. தெருக்களில் வரும் விதவைகள் ஆயிரம், மாங்கல்ய ஸ்திரிகள் ஆயிரம் இந்த சந்தர்ப்பங்களால் எந்தக்கெடுதி எந்த கைம்பெண் எதிரிட்டமையால் நேர்ந்தனவெனவும், எந்த நன்மை எந்த மாங்கல்ய ஸ்திரீயை எதிரிட்டதால் நேர்ந்ததென சொல்லமுடியும்?

ஒத்தைப்பார்ப்பானுக்கும் நமது காரியங்களுக்கும் சம்பந்தமென்ன? பார்ப்பானுக்கும், பறையனுக்கும் என்ன நடையுடை பாவனையில் வித்தியாசம்? இவனும் மனிதன், அவனும் மனிதன், வெறும் தற்செயலாய் (Mere accident) ஒருவனைப் பார்ப்பானென்கின்றோம், மற்றொருவனை பறையனென்கின்றோம், இவ்விருவருக்கும் பிறப்பில் [By birth) வித்தியாசமில்லை, இயற்கையில் [By Nature) வித்தியாசமுமில்லை. அப்படியிருக்கஒருவன் முகத்தில்விழித்தால் நற்சகுனமாம்!மற்றவன்முகத்தில் விழித்தால் துற்சகுனமாம் கோர்ட்டுகளிலும்,திருவிழாக்களிலும், ஆபீஸ்களிலும்.ரயில்வேஸ்டேஷன்களிலும் ஒத்தைப்பிராமணனை அடுத்து சந்திக்கின்றோம். அதனால் வரும் கேடு என்ன? அடிக்கடி நடக்கும் ஒரு சம்பவத்தால் இரண்டு கெடுதி விளைந்தது என்று சொல்லமுடியாமற்போனால், அதைப்போன்ற பல சம்பவங்களால் என்ன தெரிந்து கொள்ள முடியும்? ஒத்தைப்பார்ப்பானை எதிர்கொண்டால் கெடுதி எனில் ஒத்தை சூத்திரனைக்கண்டால் என்ன நன்மை? இதைப்போன்ற மூடநம்பிக்கை மற்ற உலகங்களில் காண்பதரிது. இந்த மூடநம்பிக்கை எப்படி வந்திருக்க வேண்டுமெனில் எவனோ ஒருவன் ஒருநாள் ஒத்தை பிராமணனை சந்தித்த அவசரத்தில் ஏதோ கெட்டபயன் அடைந்திருக்கக்கூடும். அந்த ஏகதேச அனுபவத்தைச் சதா நடக்கும் கெடுதியைப் போல் சித்தாந்தப்படுத்திக்கொள்கின்றார்கள். இதுதான் இந்த மூடநம்பிக்கைக்குள்ள தவறு. ராமன் லட்சுமணனை ஒருதடவை சந்தித்தால் மறுதடவையும் லட்சுமணனை சந்திப்போம் என்ற தீர்மானந்தான் இவ்வித மூடநம்பிக்கைக்குக்காரணம். எண்ணைக்குடம் அபசகுனமென்று எண்ணுவதும் இதேமனப்பான்மையின் தோஷத்தால் இருந்தாலும் இருக்கலாம். நேற்று எண்ணைக்குடத்தைக்கண்டு போகையில் மோட்டார் ஆபத்து நேரிட்டால் நாளைக்கும் நேரிடுமோ என்றசந்தேகத்தைத் தீர்மானமாகச்செய்துகொண்டுள்ள பழக்க வழக்கங்களே பெரும்பான்மை இத்தகைய மூடநம்பிக்கைகளுக்குக்காரணம். மூடநம்பிக்கையாவும் பழக்கத்தில் உண்டானவை ஒருவர் சொல்லும் விஷயத்தை மற்றொருவர் சொல்வது,அதைத்திருப்பி இன்னொருவர் சொல்வது இவ்விதமாக பலபேர் அதையே திருப்பித்திருப்பி சொல்லிக்கொண்டு வந்தால் அதுவே மூடநம்பிக்கைகளை ஸ்திரம் செய்துவிடுகிறது. ஒருவனுகிலும் சம்பவத்திற்கும் மூடநம்பிக்கைக்கும் என்ன சம்பந்தமென விசாரிப்பதே இல்லை! யோசிப்பதுமில்லை! கேட்பதுமில்லை, உடன் நிகழ்ச்சியை (Coincidence) காரண காரிய சம்பந்தமெனக் கொள்ளும் மனப்பான்மையே பல மூடநம்பிக்கைகளுக்குக்காரணமாய் இருக்கலாம்.

நமது நடவடிக்கைகள் (Behaviours] நமது எண்ணங்கள் (கொள்கைகள்) (Thoughts) நமது கோரிக்கைகள் (இஷ்டமும் சொற்களே (Wishes) நட்சத்திரங்களாலும், மாதங்களாலும், நாட்களாலும், நோங்களாலும், பூனை, பல்லி, விதவை, எட்டுக்கால்பூச்சி, கருப்பு பூனை, எண்ணில் 13, இவை போன்றவைகளால் நமது செயல்கள் பீடிக்கப்படுமென்பது பழக்கச்சொற்களே. இவைகளுக்கும், நமக்கும் நேரிடும் அனுகூல பிரதிகூலங்களுக்கும் வுள்ள சம்பந்தம், விளங்கவே இல்லை. புட்டத்தை தட்டினான் பல்லு விழுந்த கதை, போன்ற சம்பவங்களென அறியவும். ஓணான் வகையைச் சேர்ந்தது பல்லியும் ஆனால் பல்லி விழும் பலனை பஞ்சாங்கத்தில் காண்கின்றோமே யொழிய ஓணான் ஓடும் பலனை எங்கும் காணோம். ஏன்? ஒன்று வீட்டு ஜீவன், மற்றொன்று காட்டு ஜீவன், எந்த வேளையிலும் பல்லி கூச்சலிடுகின்றது. ஓணான் கூச்சலிடுவதில்லை. ஆதலின் ஓணான் சோதிடத்தில் கவனிக்கப்படவில்லை. பல்லியின் கூச்சல் பயமே, அதன் கூச்சலால் ஏதோ நன்மை தீமை பயக்குமென்ற நம்பிக்கைக்குக் காரணம் எந்த சந்தர்ப்பத்திலாகிலும், கெடியாரம் அடித்தால், "சாமி! ஜெயம்" "சாமி ரட்சிக்க" என்று கூறும் மக்கள் இந்த மூடநம்பிக்கைக்கு இடம் கொடாமல் இரார். கோடான கோடி ஆபாஸங்கள் நன்மை உண்டாக்கும் சந்தர்ப்பங்கள். கெடுதி சம்பவிக்கும் நேரங்கள், உலகில் க்ஷணத்திற்கு க்ஷணம் நேர்ந்து வருகிறது. அவைகளுக்கும், காக்கை முண்டச்சி, பல்லி, எண்ணைக்குடம், ஒத்தைப் பார்ப்பான், தும்பல், மணி அடித்தல், மலஜலம், இவைகளுக்கும், என்ன சம்பந்தமோ அதுதான் விளங்கவில்லை. நமக்கு நேரிடும் நன்மை, தின்மை, சந்தோஷம், விசனம், முதலிய சம்பவங்களாகும், கருத்த பார்ப்பானையும்வெளுத்தபறையனையும் சந்திப்பதால் ஏதோ சம்பந்தமுள்ளதாக எண்ணுவது, பயித்தியமென்றே கூற வேண்டும்.

நமது நடவடிக்கைகளுக்கு பல காரணங்கள் உண்டு. நமது பால்ய பழக்க வழக்கங்கள், நமது நடிவடிக்கைகளுக்குக் காரணமாய் இருக்கின்றன. நமது தாய் தந்தையர், உறவினர், பந்துக்கள், அக்கம்பக்கத்திலுள்ளவர்களும் நமது நடத்தைக்குகாரணகர்த்தர்களாக இருந்து வருகின்றனர். பசி, தாக, காம வினைகளும், நமது நடத்தைக்குக் காரணங்களாகும். நமக்கு வேண்டும் வேண்டாதவைகளும் நமது நடத்தைகளை வசியச் செய்கின்றன. இவை போன்ற சம்பந்தங்களால் (Connections) நமது நடவடிக்கை தோன்றுகின்றன. நமது நடவடிக்கை, நமது அருகாமையிலுள்ள சம்பந்தங்களால் நேரிடுகின்றன. கோடான கோடி மைல் தூரங்களிலுள்ள நட்சத்திரங்களாலும், விழும் வெள்ளிகளாலும் (Shooting stars) தூமகேதுக்களாலும் (வால் நட்சத்திரங்கள்-Comets), வசப்பட்டு வருகின்றது என்று நம்புவது சிறு பிள்ளைத்தனமே யொழிய, தெளிவு ஆகா.

சீர்மையில் மோட்டார் ஆபத்தில், ஆயிரக்கணக்கானவர்கள் இறக்கின்றனர். பதினாயிரக்கணக்காக காயமடைகின்றன. இவையாவும் பல்லி கூச்சலாலும், முண்டச்சி எதிர்பட்டதாலும், காகம் குறுக்கிட்டதாலும் நேர்ந்தது என்று நம்புவது, நகைப்புக்கு இடமுண்டாகும். அப்படி இருந்தும், பல் கோடி நமது நாட்டு மக்கள். மூடநம்பிக்கைகளில் நம்பிக்கை வைத்துமுள்ளார். இவர்களுக்கு விஞ்ஞான காரண காரிய முறையை விளங்க உரைக்க வேண்டும். நமது பாமர மக்களாயினும், படித்தவர்களாயினும், உலக பௌதிக ஞானத்தைப் பெற (Physical science) வசதி உண்டாக்க வேண்டும். தனது உலக ஞானத்தையும், தனது உடல் ஞானத்தையும் தெரியாதவன், மூடநம்பிக்கையாகிய படுகுழிகளில் வீழ்ந்தே கிடப்பான். அடுத்தாற் போல, வஸ்துக்களின் குணங்களை தெரிவிக்கும் ரஸாயன ஞானத்தையும் பெறவேண்டும் (Chemical science) விஞ்ஞானங்களுடன், தனது நாலாகிய உயிர் நூலையும் அறிதல் வேண்டும் (Biological science) ஜோதிடத்துக்கு ஆதாரம் வானநூல் என்று பிதற்றுவார்கள். அது சரி அல்ல. ஜோதிடம் ஞானமாகா. அது பார்த்தலுக்கும், பரீட்சைக்கும் இடம் தரா? நேற்று காந்தியாரின் விடுதலையைக் குறித்து, எத்தனை ஜோஸ்யங்கள் கிளம்பின. இந்தப் பொய்களை கண்டு வரும், ஆங்கில துரைத்தனத்தார், தங்களுக்குத்தாங்களே, புன்னகை கொள்கின்றனர்! காந்தியாரை விடுப்பது அவரைப் பொருத்தது. எந்த நட்சத்திரம், எந்த திதி, எந்த … Number எந்த மணி, எந்த நாள், எந்த நேரம் அவர்கள் மனதை கவரச் செய்யக் சக்தியுடையது? ஏட்டில் கணக்கைப் போட்டு, விடுதலை என்றால், பலிக்குமா? காந்தியாரும், தான் எண்ணிய சபதம் பலித்தால், வெளிவரக்கூடும். அல்லது துரைத்தனத்தாரை எதிர்ப்பதை நிறுத்தி விட்டாலும் விடுதலை அடையக்கூடும். இது அனுபவ அரசியல் ஞானம் [Practical politics] மற்றதெல்லாம் பயித்தியக்காரர் காட்டும் வழி என அறிக. இது போலவே மற்றெல்லா ஜோஸ்யமென அறிக. இதனை அறிந்து தான், "சத்தமும் ஜோதிடமும் சகுனும் இவை பிதற்றும் பித்தரில் பேதையாரில்". என்றார்கள், நமது சில மெஞ்ஞான முறையைக் கையாடிய பெரியோர். சிறுவர் படிக்கும் வான நூலைப் படித்தாலுமே, [Primer of astronomy], ஜோதிடர் சொல்வதெல்லாம் புரட்டு, மோசம், பித்தலாட்டமென எளிதில் அறிந்து கொள்ளலாம்.

குறிப்பு:—முன் கட்டுரையில்மெஞ்ஞான முறைக்கும், மதங்களின் மூடநம்பிக்கைகளின் முறைக்கும் [Method] வித்தியாசத்தைக் காட்ட, "தோலும் கோலுமாக முடியும்" என்று எழுதினோம். அதனை விளங்க வைக்குமாறு "குடி அரசை" படிக்கும் பல நண்பர்கள் கேட்கின்றனர். இந்த வாக்கியம் பஞ்ச தந்திரக் கதையிலிருந்து எடுக்கப்பட்டது. அது பின்வரும் சந்தர்ப்பத்தில் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. தமனகன், கரடகன் என்ற இரண்டு நரிகள், ஓர் ஓசையைக் கேட்டு மயங்கி, அது யாருடைய ஓசையாய் இருக்கலாமென திக்கிட்டு இருக்குங்காலை. ஒரு நரி அதனை விசாரிக்கலாமெனவும், மற்றொன்று வேண்டாமெனவும் வாதமிட்டு கடைசியில் அந்த சப்தம் வந்த இடத்தைப் பார்க்கையில், அங்கு ஒரு தோல் மேளமும் கொம்பும் இருக்கக்கண்டு, கொம்பு காற்றால் அசைந்து மேளத்தின் மேல் பட, அதன் சப்தத்தைக் கொண்டு வீண் திடுக்கிட்டிருந்ததையும், அதன் ஆராய்ச்சியின் பின். அது "தோலும் கொம்புமாய்" இருக்கக்கண்டு தெளிந்ததையும் குறிக்க, இந்த மேற்கோள் வழங்கப்பட்டது. சம்பவங்களை விசாரித்தால், அவைகளின் எதார்த்தம் விளங்குமென்பதை இக்கதை குறிக்கின்றது. இக்குறிப்பைமுடித்ததும், தபால் மூலமாக புதுப்பாளையத்திலிருந்து ஒரு நிருபர், மண்டையில் தேங்காயை காயமில்லாமல் உடைப்பது தெய்வீகமா, ஜாதகம், ஜோஸ்யம், ஆருடம் உண்மையா, கணபதி உபாசனை முதலியவை புரட்டா, கன்னிமார் சந்திப்புமந்திரம் புரட்டா, ஏவல். பில்லி. குட்டிச்சாத்தான் உண்மையா என வினவுகின்றார். "குடி அரசில்" இவைகளைப் பற்றி பல முறையும் எழுதி வருகின்றேன். இந்த கட்டுரைகளை கவனித்து கண்ணுறுமாறு நமது நிருபரை திரும்பவும் வேண்டிக் கொள்கிறேன்.

## Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.



## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ஆண்டு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.






## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்படும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.



## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யூம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்."

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் சேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.



## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்கவழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது
## பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)
கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.


"பசிக்கும் வயிற்றிற்கு ஒரு கவள சாதம் கொடுக்க சக்தியற்ற சாமிகளும், சாஸ்திரங்களும் இந்நாட்டுக்கு வேண்டியதில்லை"

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.
இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.
இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.
இதன் விலை அணா 0—2—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.